## திருக்குர்ஆன்

الم (١) ذَلِكَ الْكِتَابُ لا رَيْبَ فِيهِ هُدًى لِلْمُتَّقِينَ (٢)

அல்லாஹு தஆலா கூறுகிறான்:‘‘அலிப் லாம் மீம். இது அல்லாஹ்வின் திருவேதமாகும். இதில் எத்தகைய சந்தேகமும் இல்லை; பயபக்தி உடையோருக்கு( இது) நேர்வழிகாட்டியாகும். (02:1-2)

وَإِذَا قِيلَ لَهُمْ آمِنُوا كَمَا آمَنَ النَّاسُ قَالُوا أَنُؤْمِنُ كَمَا آمَنَ السُّفَهَاءُ
أَلا إِنَّهُمْ هُمُ السُّفَهَاءُ وَلَكِنْ لا يَعْلَمُونَ (١٣)

அல்லாஹு தஆலா கூறுகிறான்:‘‘மற்ற மனிதர்கள் ஈமான் கொண்டது போல், நீங்களும் ஈமான் கொள்ளுங்கள் என்று சொல்லப்பட்டால், ‘‘மூடர்கள் ஈமான் கொண்டதைப் போல், நாங்களும் ஈமான் கொள்ளவேண்டுமா?’’ என்று அவர்கள் கூறுகிறார்கள். (அப்படியல்ல;) இப்படிச் சொல்கிறவர்களே மூடர்கள். ஆயினும் தம் மடமையை அவர்கள் அறிவதில்லை’’.(02:13)

اللَّهُ لا إِلَهَ إِلاَّ هُوَ الْحَيُّ الْقَيُّومُ لا تَأْخُذُهُ سِنَةٌ وَلا نَوْمٌ لَهُ مَا فِي السَّمَوَاتِ وَمَا فِي الأَرْضِ
مَنْ ذَا الَّذِي يَشْفَعُ عِنْدَهُ إِلاَّ بِإِذْنِهِ يَعْلَمُ مَا بَيْنَ أَيْدِيهِمْ وَمَا خَلْفَهُمْ
وَلا يُحِيطُونَ بِشَيْءٍ مِنْ عِلْمِهِ إِلاَّ بِمَا شَاءَ وَسِعَ كُرْسِيُّهُ السَّمَوَاتِ وَالأَرْضَ
وَلا يَئُودُهُ حِفْظُهُمَا وَهُوَ الْعَلِيُّ الْعَظِيمُ (٢٥٥)

அல்லாஹு தஆலா கூறுகிறான்:‘‘அல்லாஹ் - அவனைத் தவிர வணக்கத்திற்குரிய நாயன் வேறு இல்லை; அவன் என்றென்றும் ஜீவித்திருப்பவன்; என்றென்றும் நிலைத்திருப்பவன்; சிறிய தூக்கமோ, பேருறக்கமோ பீடிக்காது; வானங்களில் உள்ளவையும், பூமியில் உள்ளவையும் அவனுக்கே உரியன; அவனிடம் அவன் அனுமதியின்றி யார் பரிந்துரை செய்ய முடியும்?. (படைப்பினங்களுக்கு) முன்னருள்ளவற்றையும், பின்னருள்ளவற்றையும் அவன் நன்கறிகிறான். அவனுடைய நாட்டமின்றி, அவனுடைய ஞானத்தில் இருந்து, எதையும் எவரும் அறிந்து கொள்ள இயலாது. அவனுடைய அரியாசனம் (குர்ஸிய்யு) வானங்களிலும் பூமியிலும் பரந்துள்ளது; அவ்விரண்டையும் காப்பது அவனுக்கு சிரமத்தை உண்டாக்குவதில்லை – அவன் மிக உயர்ந்தவன்; மகிமை மிக்கவன். (2:255)

## அல்ஹதீஸ்

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘‘குர்ஆனை ஓதுங்கள்! தன் தோழர்களுக்கு (– தன்னை ஓதிவருவோருக்கு), மறுமை நாளில்

அது சிபாரிசு செய்யும். ஒளிமயமான இரு ஸூராக்களான ஸூரா அல்பகரா மற்றும் ஆலுஇம்ரான் படித்திடுங்கள்!! அவ்விரண்டு அத்தியாயங்களும் இரண்டு மேகங்களைப் போன்றோ, இரு நிழற்குடைகளைப் போன்றோ அல்லது பறந்து செல்லும் இரு பறவைக் கூட்டங்களைப் போன்றோ, இருக்கும். (அந்த அத்தியாயங்கள்) இரண்டுமே தமது தோழர்களுக்காக (சிபாரிசு செய்திடத் தமக்குள்) தர்க்கித்துக் கொள்ளும். இன்னும் ஸூரதுல் பகராவை ஓதுங்கள்!!! அதைப் பிடிப்பது அருள்தரும். அதை விடுவது நஷ்டமாகும். சூனியக் காரர்கள் அதனைப் பெற்றிடச் சக்தி பெற மாட்டார்கள”. (நூல்: முஸ்லிம் 804)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘‘யூதர்கள் 71 ட்டத்தினராகப் பிரிந்தார்கள். அதில் ஒரு கூட்டத்தினர் சுவர்க்கவாதிகள். கிறித்தவர்கள் 72 கூட்டத்தினராகப் பிரிந்தனர். அதில் ஒரு கூட்டத்தினர் சுவர்க்கவாதிகள். யாருடைய கைவசம் முஹம்மதின் உயிர் உள்ளதோ.., அவன் மீது ஆணையாக! என்னுடைய உம்மத்தினர் 73 கூட்டத்தினராகப் பிரிவார்கள். ஒரு கூட்டம் சுவனத்திலும், 72 கூட்டத்தினர் நரகத்திலும் இருப்பார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! (சுவனம் செல்லும்) அவர்கள் யார்? எனக் கேட்கப்பட்டது. நபி (ஸல்) சொன்னார்கள்: ‘அந்த ஜமாஅத்’ ’’ (ஸுனன் இப்னுமாஜா)

ஸுனன் திர்மிதியில், அப்துல்லாஹ் பின் அம்ரு (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது:- ‘‘அல்லாஹ்வின் தூதர் அவர்களே! சுவனம் செல்லும் அக்கூட்டத்தினர் யார்? என ஸஹாபாக்கள் கேட்டார்கள். ‘எதில் நானும் என் தோழர்(ஸஹாபாக்)களும் இருக்கிறோமோ அவ்வழியில் செல்வோர்தான் அவர்கள்’ என்றார்கள் நபி (ஸல்) அவர்கள்.’’ ما أنا عليه وأصحابي (திர்மிதீ 2641)



# سُوْرَةُ آلِ عِمْرَانَ

## ஆலு இம்ரான்-இம்ரானின் குடும்பத்தினர

3

## இது ‘மதனீ’ அத்தியாயம

## சில நோக்கங்கள்
### *Few Objectives*

- ❖ மனோஇச்சை மற்றும் சந்தேகங்களுக்கு மத்தியில் நிலைகுலையாமையை வெளிப்படுத்தல்.
- ❖ 1-120 வரை சிந்தனை ரீதியான உறுதி அதாவது சந்தேகங்களுக்கு எதிராக, நிலைகுலையாமல் நிற்பது பற்றி தெளிவு தரப்பட்டுள்ளது.
- ❖ 121வது வசனம் முதல் இறுதிவரை அந்தரங்கமான மனஉறுதி - இச்சைக் கெதிராக நிலைகுலைந்திடாமல் உறுதிகாட்டுவது பற்றிய விளக்கம் தரப்பட்டுள்ளது.
- ❖ ஜீஸஸ் எனப்படும் ஈஸா (அலை) அவர்கள், அல்லாஹ்வினால் அனுப்பப்பட்ட தூதரே; இறைவனின் மகன் இல்லை..! ஸூரா ஆலு இம்ரானின் மையப்புள்ளி – அசல் நோக்கம் இதுவே. 1
- ❖ இந்த அத்தியாயத்தின் மற்றொரு நோக்கம் இதுவாகும்: அல்லாஹ்வை வணங்குக; படைப்புகளின் வணக்கத்தில் இருந்து, தவிர்ந்திடுக! அதாவது இம்ரான் குடும்பத்தினரை வணங்காதீர்! அவர்களைப் படைத்தவனை வணங்குவீர்!! (03:64) (03:59)

إِنَّ مَثَلَ عِيسَى عِنْدَ اللَّهِ كَمَثَلِ آدَمَ خَلَقَهُ مِنْ تُرَابٍ ثُمَّ قَالَ لَهُ كُنْ فَيَكُونُ (3:59)

قُلْ يَا أَهْلَ الْكِتَابِ تَعَالَوْا إِلَى كَلِمَةٍ سَوَاءٍ بَيْنَنَا وَبَيْنَكُمْ أَلاَّ نَعْبُدَ إِلاَّ اللَّهَ

وَلا نُشْرِكَ بِهِ شَيْئاًوَلا يَتَّخِذَ بَعْضُنَا بَعْضاً أَرْبَاباً مِنْ دُونِ اللَّهِ

فَإِنْ تَوَلَّوْا فَقُولُوا اشْهَدُوا بِأَنَّا مُسْلِمُونَ (3:64)

- ❖ நஜ்ரான் தூதுக்குழு மற்றும் உஹுத் யுத்தம், இரண்டும் சிந்தனை மற்றும் ஒழுக்க உறுதிக்கு எடுத்துக்காட்டாகத் திகழுகின்றன. (புகாரீ : 4380)
- ❖ இவ்வத்தியாயத்தில் நிலைகுலையாத தன்மைக்கு ஊறு விளைவிக்கும் விஷயங்களும் சுட்டிக்காட்டப்படுகின்றன. அதாவது ஹுப்புஷ் ஷஹவாத் - மனோ இச்சைகளைப் விரும்பிப் பின்பற்றுதல் (03:14, 155, 164)
- ❖ இந்த ஸூராவின் பெயர் ஆலுஇம்ரான் ஆகும். இம்ரானின் மனைவிமற்றும் மகள் இருவருமே உறுதிகுலையாத தன்மைக்கு உயர்வான உதாரணங்கள் ஆவர்.
- ❖ மர்யம் (அலை) அவர்கள், வணக்கத்திலும், கற்பிலும் உறுதிகுலையாத தன்மைக்கு உன்னதமான உதாரணமாகத் திகழுகிறார்கள். அவர்களின் தாயாரோ, மார்க்கச் சேவையில் உறுதிகுலையாத தன்மைக்கு மகத்தான முன்மாதிரியாகத்

---

1. குததுல் அஸ்ஹார் பீ கஷ்பில் அஸ்ரார் லிஸ்ஸுயூத்தீ

திகழுகிறார்கள். இதோ தன் இறைவனிடம் அவர்கள் முறையிடுவதைப் போன்று : رَبِّ إِنِّي نَذَرْتُ لَكَ مَا فِي بَطْنِي مُحَرَّراً 1

## சில தலைப்புகள்
## *Few Topics*

1. -திருக்குர்ஆன், தவ்ராத் மற்றும் இன்ஜீல் ஆகிய வேதங்கள் அல்லாஹ்வால் அருளப்பட்டவை என்பதன் நிரூபணம்.(1-4)
2. அல்லாஹ்வின் வல்லமைக்கான ஆதாரங்கள், அவனது தனித்துவத்திற்கான விளக்கம்.(5-6)
3. திருக்குர்ஆனில் முஹ்கமாத் மற்றும் முதஷாபிஹாத் என இரு வகையான வசனங்கள் உள்ளன.(7) இதில் மக்கள் இரு பிரிவினராக உள்ளனர்.(7)
4. ‘ராஸிகூன்-பில்--இல்ம்’ (உறுதியான கல்வியாளர்கள்) அல்லாஹ்வின் பால் திரும்புதல் - விபரம்(8-9)
5. நிராகரிப்பாளர்களின் முடிவு (10-13)
6. மக்களை ஏமாற்றும் இச்சை, உலக இச்சைகளின் வகைகள் மற்றும் இவைகளை விட சிறப்பான விஷயங்களின் பால் இறைவிசுவாசிகளின் கவனத்தைத் திருப்புதல். (14-17)
7. அல்லாஹ்வின் தனித்துவம், மார்க்கத்தில் இஸ்லாம் மட்டும் ஏற்கப்படுதல், வேதம் பெற்றவர்களிடம் ஆதாரத்தை நிலை நாட்டுதல் போன்றவைகளின் விபரம்.(18-20)
8. நபிமார்களையும் நல்லோர்களையும் கொலை செய்யும் காபிர்கள் பெறுகின்ற கூலி.(21-22)
9. வேதம் பெற்றவர்களின் தன்மையும் பின் எச்சரிக்கையும்.(23-25)
10. ஒவ்வொரு பொருளின் மீதும் அல்லாஹ்வின் ஆற்றல் பற்றிய விபரம்.(26-27)
11. காபிர்களுடனான தொடர்புகள் குறித்த உத்தரவும் கூடவே மறுமை தண்டனை பற்றிய எச்சரிக்கையும்.(28-30)
12. கட்டுப்பட்டு நடப்பதற்கான நற்கூலியாக, அல்லாஹ்வின் அன்பு கிடைக்கும்.(31-32)
13. குறிப்பிட்ட சில நபிமார்களின் சரித்திரங்கள்; குறிப்பாக மர்யம் (அலை) அவர்களின் சரித்திரம் சொல்லப் பட்டுள்ளது.(33-34)
14. ஜகரிய்யா (அலை) அவர்களின் சரித்திரம் (38-41)
15. ஈஸா (அலை) அவர்களின் தன்மைகளும் அவர்களுடைய அற்புதங்களும் (42-51)

---

1. விபரங்களுக்கு: தப்ஸீர் இப்னு கஸீர்

16. ‘ஹவாரிய்யீன்’- களின் நிலையும், அவர்கள், ஈஸா (அலை) அவர்களுக்கு செய்த உதவியும். (52-53)
17. ஈஸா(அலை) அவர்களுக்கெதிரான யூதர்களின் சதித்திட்டம்; அவர்களை அல்லாஹ் மேலே உயர்த்திக் கொள்ளுதல்; மறுமைநாளில் இருதரப்பினருக்கும் கிடைக்கின்ற கூலி பற்றிய விபரம்.(54-58)
18. ஈஸா (அலை) அவர்களை மனிதராக ஏற்காதவர்களுக்கு மறுப்பு. (59-64)
19. இப்றாஹீம் (அலை) அவர்களை யூதர் என்றோ அல்லது கிறித்தவர் என்றோ நம்புகிறவர்களுக்கு மறுப்பு. (65-68)
20. முஸ்லிம்கள் ஹிதாயஹ் - நேர்வழியைப் பெற்ற பின் அவர்களை வழிகெடுக்க வேதக்காரர்கள் சதி செய்கிறார்கள்.(69-74)
21. வேதக்காரர்களின் இயல்பும், அவர்களுக்கான கடுமையான எச்சரிக்கையும்.(75-78)
22. நபிமார்கள் மீதான வேதக்காரர்களின் அபாண்டங்களும், அதற்கான மறுப்பும். (79-80)
23. நபி (ஸல்) அவர்கள் மீது விசுவாசம் கொள்ள, இதர நபிமார்களிடம் உறுதிமொழி வாங்கப்பட்டும் கூட, வேதம் கொடுக்கப்பட்டவர்கள் இதனை மறுக்கிறார்கள். இஸ்லாம் மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட மார்க்கம் ஆகும். (81-85)
24. அறிந்து கொண்டே வழிகேட்டில் செல்வோருக்கு, நேர்வழி கிடைக்கும் என எதிர்பார்க்க இயலாது. அதற்கான தண்டனையின் விபரமும் இருக்கிறது.(86-89)
25. காபிர்களின் - நிராகரிப்பாளர்களின் வகைகள்.(90-91)
26. விருப்பமான பொருள்களை(யும்) செலவு செய்து, நன்மையைப் பெறும் விபரம்.(92)
27. இஸ்ராயீல் என்கிற ய..கூப் (அலை) அவர்கள், தாமாகவே சில பொருள்களைத் தன் மீது ஹராமாக்கி (த் தவிர்ந்து) கொண்டார்கள். அவைகளைப் பற்றிய யூதர்களின் தவறான நம்பிக்கைக்கு மறுப்பு.(93-95)
28. பைத்துல்லாஹ்-வின் மகத்துவம் மற்றும் ‘ஹஜ்’ கடமையாக்கப்பட்ட விபரம்.(96-97)
29. வேதம் கொடுக்கப்பட்டவர்களின் ‘குப்ரு’ - இறை நிராகரிப்பு மற்றும் அல்லாஹ்வின் பாதையில் செல்வோரைத் தடுப்பதுகுற்குத் தடை. (98-99)
30. விசுவாசிகளுக்கு உபதேசங்கள்: ‘அல்லாஹ்வின் கயிற்றைப் பலமாகப் பற்றிடுக! நன்மையை ஏவித் தீமையைத் தடுத்திடுக!!’ மற்றும் ‘கைர உம்மஹ்’ - சீரிய சமுதாயம் பற்றிய விபரம் போன்றவை..!(100-110)

31. வேதம் கொடுக்கப் பட்டவர்கள் மற்றும் அவர்களில் இஸ்லாத்தைத் தழுவியவர்களின் நிலைகள்!(111-115)
32. காபிர்களின் செயல்கள் பரப்பப்பட்ட புழுதியைப் போல் வீணாகிப் போகும். (116-117)
33. விசுவாசிகளோடு காபிர்களின் பகையும் நயவஞ்சகமும்(118-120)
34. ‘பத்ரு’ மற்றும் ‘உஹத்’ யுத்தங்கள் குறித்த வசனங்கள்(121-129)
35. நரகத்தில் இருந்து தப்பித்து, சுவர்க்கத்தில் நுழைய முஸ்லிம்களுக்கான காரணங்கள்(130-136)
36. அநியாயக்காரர்கள் மூலமாக முஸ்லிம்கள் சோதிக்கப்படுவதும், அதில் பொறுமை காப்பதற்காக வழங்கப்படும் கூலியும். (137-141)
37. உஹத் யுத்தத்தில் கலந்துகொண்டவர்களுக்கு, ‘கடுமையான முயற்சி மற்றும் பொறுமை மூலம் சுவனம் பெறப்படுகிறது, என்கிற உபதேசம் தரப்படுகிறது.(142-143)
38. நபி (ஸல்) அவர்கள் மனிதரே என்பதற்கான உறுதியான விளக்கம், மக்கள் யாவருக்கும் மரணம் வருவதைப் போல், அல்லாஹ்வின் கட்டளைப்படி, நபி (ஸல்) அவர்களுக்கும் மரணம் நிச்சயமான ஒன்றே!(144-145)
39. முந்தைய நபிமார்கள் மற்றும் அவர்களின் ஹவாரிய்யூன்கள் - ஆதரவாளர்கள், ஜிஹாதின் போது காட்டிய மனஉறுதியும், அவர்களுக்கு அல்லாஹ் தந்த வாக்குறுதியும்.(146-148)
40. காபிர்களுக்குக் கட்டுப்படுவது பற்றி எச்சரிக்கை மற்றும் அல்லாஹ்வை நண்பனாக ஆக்குதல்; காபிர்களுக்குக் கிடைக்கும் முடிவு பற்றிய விபரம்.(149-151)
41. உஹத் யுத்தத்தில், முஸ்லிம்கள் சந்தித்த கஷ்டங்களின் காரணங்கள் (152-155)
42. நயவஞ்சகர்களின் நிலை மற்றும் அவர்களைப் போல் நடந்து கொள்வதற்குத் தடை.(156)
43. மு.்.மின்களுக்கு - இறைவிசுவாசிகளுக்கு ‘ஜிஹாத்’ குறித்து ஆர்வமூட்டப் பட்டிருக்கிறது.(157-158)
44. நபி (ஸல்) அவர்களின் தன்மைகள் மற்றும் நற்குணங்கள் பற்றிய விபரம்.(164-168)
45. உஹத் யுத்தத்தில், முஸ்லிம்கள் சந்தித்த கஷ்டங்களின் காரணங்கள், மற்றும் ஷுஹதாக்கள் - வீரதியாகிகளின் மகத்துவமும் மேன்மையும்.(169-174)
46. அவ்லியாவுஷ் ஷைத்தான் - ஷைத்தானின் தோழர்களிடம் அஞ்சாமல் இருப்பது மு.்.மின்களின் கடமை; அவர்களுடைய நிராகரிப்பின் கடுமையால் கவலைப்படாதிருக்க உபதேசங்கள்.(175-179)

47. உலக வாழ்க்கை, மற்றும் மறுமையில் கஞ்சன் சந்திக்கும் முடிவு; யூதர்கள் தங்களை அல்லாஹ்வை விட்டும் தேவையற்றவர்களாகக் கருதிக் கொண்டதும் அதற்கான எச்சரிக்கையும்.(180-184)
48. உலகம் அழியக்கூடியதும், பரீட்சைக் கூடமும் ஆகும்; பொறுமையின் பெறுமை!(185-186)
49. வேதம் கொடுக்கப்பட்டவர்களின் இயல்பு; அவர்களின் ஒப்பந்த மீறல்; அவர்களின் சில தன்மைகளும் அதன் விளைவும்.(187-188)
50. அல்லாஹ்வின் தனித்துவம் மற்றும் அவனுடைய வல்லமை பற்றிய விவரம்.(189-190)
51. உலுல் அல்பாப் - அகப்பார்வை உடையவர்கள் அல்லாஹ்வின் படைப்புகள் மற்றும் சடப்பொருள்களிலே, கவனம் காட்டி சிந்தித்துப் பார்த்தல்.(191-195)
52. குப்பார் - நிராகரிப்பாளர்களின் பலம் மற்றும் வெற்றியால் ஏமாறாமல் இருப்பது; அவர்கள் காணப் போகும் இறுதி முடிவு.(196-197)
53. இறையச்சம் மற்றும் அதற்கான கூலியின் விபரம்; பொறுமையைப் பெற உத்தரவு!(198-200)

## சில பாடங்கள்
## *Few Lessons*

1- இவ்வத்தியாயத்தில் உறுதிகுலையாமல் இருப்பதற்கான வழிமுறைகள் காட்டப்படுகின்றன:

- அல்லாஹ்வின்பால் திரும்புவது (வசன எண்கள்: 8, 35, 38, 192-194)
- வணக்கம் மற்றும் வணக்கசாலிகள் பற்றிய விபரமும் இடம் பெறுகிறது. உதாரணமாக மர்யம் (அலை)(37), ஜகரிய்யா (அலை)(39), மற்றும் மு.ஃ.மின்கள்(193).
- த.ஃ.வத் (இறை அழைப்புப் பணி)1 (104-110)
- வாழ்க்கையின் தெளிவான நோக்கம். (191)
- சகோதரத்துவம்2 (103,105)

2- கிறித்தவர்களின் கேள்விகளுக்கு முழுமையாக பதில் தரப்பட்டிருக்கிறது. குறிப்பாக ஈஸா (அலை) அவர்கள் மனிதர்களில் ஒருவரே என நிரூபிக்கப்பட்டுள்ளது. அதன்

1. விபரங்களுக்கு: அத்த.ஃ.வஹ் வ ஸிபாதுத்தாஇயஹ் (த.ஃ.வது கைரில் முஸ்லிமீன் - அப்துர் ரஸ்ஸாக் அல்அப்பாத்)
2. விபரங்களுக்கு: தப்ஸீர் தபரீ – பக்கம் 71 பார்க்க

எளிமையான ஆதாரம் இதோ:- ‘ஈஸா’ (அலை) அவர்கள் மர்யம் (அலை) அவர்களின் மகன்; மர்யம் (அலை) அவர்களோ, இம்ரானுடைய மனைவியின் வயிற்றுதித்தவர் ஆவார். யாருக்கு வம்சாவழித் தொடர் இருக்கிறதோ அவரை மனிதர் என்றிட யோசிக்கவேண்டுமா?

3- படைப்புகளை ஆழமாகச் சிந்திப்பதும், வணக்கமாகும். வசனம் 191. படைப்புகளைச் சிந்திப்பதில் இருந்து (discovery of creation) படைத்தவனைக் கண்டுபிடித்தல் வரை (discovery of creator) செல்லுதல் கட்டாயமானதாகும். 1

4- அல்லாஹு தஆலா நிலையானவன்; உயிரோட்டமானவன். விண்ணிலும் மண்ணிலும் (எங்குமே), அவனுக்கு மறைவானது எதுவுமில்லை.

5- விசுவாசிகள் முஹ்கமாத் - தெளிவாக்கப்பட்ட வசனங்களின்படி செயல்படுவதும், முதஷாபிஹாத் -பல பொருள் கொண்ட வசனங்களை விசுவாசம் கொள்வதும் அவசியமானதாகும்.

6- ‘முதஷாபிஹாத்’ வசனங்கள் (விசுவாசத்தை) பரிசோதிப்பதிப்பதற்காக உள்ளவை.

7- மக்கள் விரும்பக் கூடியவை உலகின் சுகபோகங்கள் ஆகும். மறுமை வாழ்வே சிறப்பானதாகும்; நிலையானதும் ஆகும்.

8- ‘நாங்கள் நரகிற்குச் செல்லமாட்டோம்’ என்ற வேதம் கொடுக்கப்பட்டோரின் தாவா – தம்பட்டம், பொய்யானதாகும்.

9- ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் படைப்பு ரீதியாக வேறுபாடு உண்டு; இன ரீதியாகப் பெண்களைவிட ஆண்வர்க்கம் சிறந்தவர்க்கம் இல்லை.

10- கருத்துவேறுபாட்டைக் களைய சீட்டுகுலுக்கிப் போடலாம்.

11- ‘ஈஸா’ (அலை) தன் தாய்க்கு நற்செய்தியாகத் திகழ்ந்தார்கள்.

12- அல்லாஹ் எப்படி வேண்டுமானாலும் விரும்பியவாறு படைக்கலாம்.

13- ‘ஈஸா’ (அலை) யூதர்களிடத்தில் புதிய மார்க்கத்தைக் கொண்டுவரவில்லை.

14- ‘ ஈஸா’ (அலை) தன்னைத் தற்காத்திட முடியாமை, அவர்களின் மனிதத் தன்மை மற்றும் இயலாமைக்கு சான்று ஆகும்.

15- ஈஸா’ (அலை) யூதராகவோ, கிறித்தவராகவோ இருந்தார்கள் என்ற (அவ்விருசாராரின்) தாவா - தம்பட்டம் பொய்யானதே ஆகும்.

16- இப்றாஹீம் (அலை) அவர்களுக்கும், அவர்களின்

1. விபரங்களுக்கு: தப்ஸீர் தபரீ – பக்கம் 474 பார்க்க (A Brief Illustrated Guide To Understanding Islam)

மார்க்கத்திற்கும் நெருக்கமாக இருப்பவர்கள் முஸ்லிம்களே!

17- வேதம் கொடுக்கப்பட்டவர்களில் அதிகமானோர், பொறாமை கொண்டு முஸ்லிம்களை சத்தியத்தில் இருந்து வழிதவறச் செய்கிறார்கள்.

18- பொய்யான சத்தியம், பெரும்பாவங்களில் ஒன்றாகும்.

19- வேதம் கொடுக்கப்பட்டவர்கள் சூழ்ச்சிகளின் மூலமாக முஸ்லிம்களை வழிகெடுக்கப் பார்க்கிறார்கள்; அவர்களுக்கு உதவி செய்வோரும் அவர்களைச் சார்ந்தவர்களே.!

20- நன்மையை ஏவுவதும், தீமையைத் தடுப்பதும், முஸ்லிம்கள் ஒவ்வொருவருக்கும் கடமையாகும்.

21- சத்தியம் தெளிவானபின் வேதம் கொடுக்கப்பட்டவர்களைப்போல் கருத்து வேறுபாடு கொள்வது மிகவும் கெட்டதாகும்.

22- அல்லாஹு தஆலா, அடியார்களை விட்டும் தேவையற்றவன்; அடியார்களைத் தண்டிப்பதை விட்டும் .தேவையற்றவன்; அவனோ அவர்களுக்கு நன்மையை நாடுகிறான்.

23- அல்லாஹ்வின் மீது விசுவாசம் கொண்டு, நன்மையை ஏவி தீமையைத் தடுப்பதில்தான், சமுதாயத்திற்கு நலம் இருக்கிறது.

24- வேதம் கொடுக்கப்பட்டவர்களில், விசுவாசம் கொள்ளாதோர் மற்றும் நன்றி கொன்றோர் மீது அல்லாஹ் கோபம் கொள்கிறான்.

25- நயவஞ்சகர்களிடம் எப்போதும் எச்சரிக்கை தேவை!

26- முஸ்லிம்களின் கஷ்டத்தைக் கண்டு மகிழ்பவன் முனாபிக் ஆவான்.

27- ஒரு முனாபிக், எப்போதுமே முஸ்லிம்களோடு, வஞ்சகம், குரோதம், பகைமை பாராட்டுகிறான்.

28- சக்தியைப் பொறுத்தவரை எப்போதும் முஸ்லிம்கள் தயார் நிலையில் இருக்கவேண்டும்.

29- மனோரீதியான தோல்வி பெருந்தோல்வி ஆகும். அதன் மூலம் மனிதன் முழுமையாகத் தோல்வி அடைகிறான்.

30- எதிரியை வீழ்த்த : தயார் நிலை, அஞ்சாத தன்மை, பிளவுகள் மற்றும் கருத்து வேறுபாடு இல்லாமை, அல்லாஹ்வின் மீது அசையாத உறுதி தவக்குல் யாவும் அவசியம்.

31- அல்லாஹ்விற்குக் கட்டுப்படுவதன் மூலமாகவே அவனது இசைவையும் அருளையும்பெற்றிட முடியும்.

32- பாவங்களைத் தொடர்ந்து செய்வது, பெரும் பாவமாகும்.

33- அறிந்து கொண்டே ஒரு பாவத்தைச் செய்யும் பொழுதுதான், அவன் குற்றம் பிடிக்கப்படுவான்.

34- சுவனம் கஷ்டங்களால் சூழப்பட்டுள்ளது; சிரமம் இன்றி அதை அடைய இயலாது.

35- நபிமார்கள் அனைவரும் மனிதர்களாகவே இருந்தார்கள்; மனித தேட்டங்கள் அவர்களிடம் வந்துகொண்டே இருந்தன.

36- விசுவாசம் கொள்ளாதோரிடத்தில், மனப்பூர்வமான அன்புகொள்வது, இம்மை மறுமை இரண்டிலும் நஷ்டத்தை உண்டாக்கும்.

37- அல்லாஹ்வின் மீது விசுவாசம் கொள்ளாதவர்கள், உலக மோகத்தில் திளைக்கிறார்கள்; அச்சத்தோடு வாழுகிறார்கள்!

38- கருத்து வேறுபாடு, ஏமாற்றுதல், பாவம் செய்தல், உலக மோகம் யாவும் தோல்விக்கான காரணங்கள் அவை ஆகும்.

39- கஷ்டமான சமயங்களில், வருகின்ற சிறுண துயில், அமைதி மற்றும் பாதுகாப்பின் அடையாளமாகும்.

40- ஷைத்தான் விசுவாசிகளிடம், உலக ஆசையை விதைத்து வழிகெடுக்கிறான்.

41- கவலை, வருத்தம், நிராசை முதலியவை அவிசுவாசிகளுக்கு அல்லாஹ் வழங்கும் தண்டனைகள்.

42- இரக்கமும் ஆதரவும் நல்ல தலைவரின் அடையாளமாகும்.

43- கடுமையும், அவசரமும் மனிதனை வெறுப்பின் பால் தூண்டுகிறது.

44- ஒவ்வொரு விஷயத்திலும், குறிப்பானதோ பொதுவானதோ, ஆலோசனை செய்தல், இஸ்லாத்தின் அடையாளமாகும்.

45- இலஞ்சமும் மோசடியும் ஹராம் ஆகும்.

46- அல்லாஹ்வின் எதிரிகளுக்கு உதவுகின்ற, - முஸ்லிம்களுக்கு எதிராக நடக்கின்ற - ஒவ்வொருவரும், ஈமானுக்குப் பகரமாக குஃப்ரை விலைக்கு வாங்கு.கின்றனர்.

47- ஒரு மு.ஃமின் கஷ்டத்தைச் சந்திக்கும் போது, மன்றாடி-மனமுருகி கூறுக: ‘ஹஸ்புனல்லாஹு வ நி.ஃமல் வகீல்’ (நமக்கு அல்லாஹ் போதும்; அவனே சிறப்பான பாதுகாவலன்).

48- ஈமானும் இறையச்சமும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டதாகும்.

49- கருமித்தனத்தின் தண்டனையை மனிதன் உலகிலேயே பெறுவான்.

50- ஒவ்வொரு உயிருக்கும் மரணம் உண்டு; மனிதன் - ஜின் - வானவர் என யாவருக்குமே!

51- அறிவுள்ளவன் ஒருபோதும் அல்லாஹ்வை மறக்கமாட்டான்.

52- முஸ்லிம்கள் தங்கள் அமல் (செயல்) மற்றும் இல்ம் (கல்வி) மூலம் ஒவ்வொரு கணமும் அல்லாஹ்வை நெருங்குக!

53- ஷரீஅத் சட்டத்திலும் கேள்வி கணக்கிலும், ஆண்களும் பெண்களும் சமமானவர்களே!

54- உலகம் எவ்வளவு அதிகமாகக் கிடைத்து விட்டாலும், மறுமையின் முன்னிலையில் அது மிகவும் சொற்பமானதே!

55- முடிவுகளில் படிப்பினை பெற வேண்டும்.

56- அல்லாஹ்வின் பாதையில் பொறுமை காட்டுவதற்கு மகத்தான அந்தஸ்தும் கூலியும் உண்டு.

57- எல்லையைப் பாதுகாப்பதன் கூலி மிகப் பிரமாண்டமானதாகும்.

58- பொறுமை, உறுதி குலையாமை, இறைபச்சம் யாவும் வெற்றியின் திறவுகோல்கள்.

## தொடர்பு நுட்பமான விரிவுரைகள

- ❖ ஸூரா அல்பகரா ஆதாரத்தை நிலைநாட்ட தெளிவான முன்மாதிரி ஆகும்; ஆலு இம்ரானோ 'சந்தேகங்களை மறுக்க' முன்மாதிரி ஆகும்.
- ❖ ஸூரா அல்பகரா மற்றும் ஆலு இம்ரான் உடைய பொதுவான தலைப்பு 'தூதுத்துவத்தை நிரூபித்தல்'
- ❖ ஸூரா அல்பாதிஹாவில், அல்லாஹ்வின் புகழ்ச்சி மற்றும் பெருமை; ஸூரா அல்பகரா மற்றும் ஆலு இம்ரானிலே 'தூதுத்துவத்தை நிரூபித்தல்'
- ❖ "வலள்ளால்லீன்' என்பதன் முழு விளக்கம்; ஸூரா ஆலு இம்ரானில், கிறித்தவர்களின் கொள்கை மற்றும் சந்தேகங்களுக்கு மறுப்பு.

அழைப்புப் பணி, சீர்திருத்தப்பணி, மனப்பக்குவம், மற்றும் நினைவூட்டலுக்காக – சிந்திக்கவும் மனனமிடவும் உகந்த இறைவசனங்கள் மற்றும் நபிமொழி ..!

### திருக்குர்ஆன்

وَلْتَكُن مِّنكُمْ أُمَّةٌ يَدْعُونَ إِلَى الْخَيْرِ وَيَأْمُرُونَ بِالْمَعْرُوفِ وَيَنْهَوْنَ
عَنِ الْمُنكَرِ وَأُولَٰئِكَ هُمُ الْمُفْلِحُونَ 3:104

3:104. மேலும், (மக்களை) நன்மையின் பக்கம் அழைப்பவர்களாகவும், நல்லதைக் கொண்டு (மக்களை) ஏவுபவர்களாகவும் தீயதிலிருந்து (மக்களை) விலக்குபவர்களாகவும் உங்களிலிருந்து ஒரு கூட்டத்தார் இருக்கட்டும் - இன்னும் அவர்களே வெற்றி பெற்றோராவர்.

كُنتُمْ خَيْرَ أُمَّةٍ أُخْرِجَتْ لِلنَّاسِ تَأْمُرُونَ بِالْمَعْرُوفِ وَتَنْهَوْنَ عَنِ الْمُنكَرِ
وَتُؤْمِنُونَ بِاللَّهِ ۗ وَلَوْ آمَنَ أَهْلُ الْكِتَابِ لَكَانَ خَيْرًا لَّهُم ۚ
مِّنْهُمُ الْمُؤْمِنُونَ وَأَكْثَرُهُمُ الْفَاسِقُونَ 3:110

3:110 மனிதர்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட (சமுதாயத்தில்) சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்கிறீர்கள் (ஏனெனில்) நீங்கள் நல்லதைச் செய்ய ஏவுகிறீர்கள் தீயதை விட்டும் விலக்குகிறீர்கள் இன்னும் அல்லாஹ்வின்மேல் (திடமாக) நம்பிக்கை கொள்கிறீர்கள் வேதத்தையுடையோரும் (உங்களைப் போன்றே) நம்பிக்கை கொண்டிருப்பின், (அது) அவர்களுக்கு நன்மையாகும் - அவர்களில் (சிலர்) நம்பிக்கை கொண்டோராயும் இருக்கின்றனர் எனினும் அவர்களில் பலர் (இறை கட்டளையை மீறும்) பாவிகளாகவே இருக்கின்றனர்.

إِنَّ الدِّينَ عِندَ اللَّهِ الْإِسْلَامُ ۗ وَمَا اخْتَلَفَ الَّذِينَ أُوتُوا الْكِتَابَ إِلَّا مِن بَعْدِ
مَا جَاءَهُمُ الْعِلْمُ بَغْيًا بَيْنَهُمْ ۗ وَمَن يَكْفُرْ بِآيَاتِ اللَّهِ فَإِنَّ اللَّهَ سَرِيعُ الْحِسَابِ 3:19

3:19 நிச்சயமாக (தீனுல்) இஸ்லாம் தான் அல்லாஹ்விடத்தில் (ஒப்புக்கொள்ளப்பட்ட) மார்க்கமாகும் வேதம் கொடுக்கப்பட்டவர்கள் (இதுதான் உண்மையான மார்க்கம் என்னும்) அறிவு அவர்களுக்குக் கிடைத்த பின்னரும் தம்மிடையேயுள்ள பொறாமையின் காரணமாக (இதற்கு) மாறுபட்டனர் எவர் அல்லாஹ்வின் வசனங்களை நிராகரித்தார்களோ, நிச்சயமாக அல்லாஹ் (அவர்களுடைய) கணக்கைத் துரிதமாக முடிப்பான்.

وَمَن يَبْتَغِ غَيْرَ الْإِسْلَامِ دِينًا فَلَن يُقْبَلَ مِنْهُ وَهُوَ فِي الْآخِرَةِ مِنَ الْخَاسِرِينَ 3:85

3:85 ன்னும் இஸ்லாம் அல்லாத (வேறு) மார்க்கத்தை எவரேனும் விரும்பினால் (அது) ஒருபோதும் அவரிடமிருந்து ஒப்புக் கொள்ளப்பட மாட்டாது மேலும் அ(த்தகைய)வர் மறுமை நாளில் நஷ்டமடைந்தோரில் தான் இருப்பார்.

## அல்ஹதீஸ்-1

இறைதூதர் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘‘நிச்சயமாக நாங்கள் மிகவும் ,ழிந்த சமுதாயமாக ,ருந்தோம். ,ஸ்லாத்தின் மூலமாக அல்லாஹ் எங்களைக் கண்ணியப்படுத்தினான். எந்த ,ஸ்லாத்தின் மூலமாக அல்லாஹ் மதிப்பைத் தந்தானோ! அதை விட்டு மற்றவைகளில் மதிப்பைத் தேடினால் அல்லாஹ் ,ழிவாக்கி விடுவான்’’ (ஸஹீஹ் அத்தர்யீப்: 2893)

## அல்ஹதீஸ்-2

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் (சட்ட) வரம்புகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பவனுக்கும் அவற்றை மீறி நடப்பவனுக்கும் உவமை - ஒரு சமுதாயத்தைப் போன்றதாகும். அவர்கள் கப்பலில் (தங்களுக்கு இடம் பிடிப்பதற்காகச்) சீட்டுக் குலுக்கிப் போட்டார்கள். (அதன்படி) அவர்களில் சிலருக்குக் கப்பலின் மேல் தளத்திலும் சிலருக்குக் கீழ்த் தளத்திலும் இடம் கிடைத்தது.கீழ்த் தளத்தில் இருந்தவர்களுக்குத் தண்ணீர் தேவைப்பட்டபோது (அதைக் கொண்டு வர) அவர்கள் மேல் தளத்தில் இருப்பவர்களைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. (அதனால் மேலே இருந்தவர்களுக்குச் சிரமம் ஏற்பட்டது). அப்போது, கீழ்த் தளத்தில் இருந்தவர்கள் (தமக்குள்) “நாம் (தண்ணீருக்காக) நம்முடைய பங்கில் (கீழ்த் தளத்தில்) ஓட்டையிட்டுக் கொள்வோம் நமக்கு மேலே இருப்பவர்களைத் தொந்தரவு செய்யாமலிருப்போம்“ என்று பேசிக் கொண்டார்கள். அவர்கள் விரும்பியபடி செய்து கொள்ள அவர்களை மேல் தளத்தில் உள்ளவர்கள்விட்டுவிட்டால் (கப்பலில் இருப்பவர்கள்) அனைவரும் அழிந்து போவார்கள். (ஓட்டையிட விடாமல்) அவர்களின் கரத்தைப் பிடித்துக் கொள்வார்களாயின் அவர்களும் தப்பிப் பிழைத்துக் கொள்வார்கள். (அவர்களுடன் மற்ற) அனைவரும் தப்பிப் பிழைத்துக் கொள்வார்கள்.

என நு.்.மான் இப்னு பஷீர்(ரலி) அறிவித்தார்.(அல்புகாரீ: 2493 )

# سُوْرَةُ النِّسَاءِ

# அந்நிஸா
# பெண்கள்

**4**

## இது ‘மதனீ’ அத்தியாயம்

## சில நோக்கங்கள்
## *Few Objectives*

❖ இந்த அத்தியாயத்தின் நோக்கம், பலம்குன்றியவர்களோடு நீதியோடும் இரக்கத்தோடும் நடந்து கொள்ளுதல்.

❖ குடும்ப அமைப்பைத் தக்கவைத்திட, நான்கு அடிப்படை விஷயங்கள் மிகவும் இன்றியமையாதவை:

- அகீதா (கொள்கை): அல்லாஹ் பார்த்துக்கொண்டிருக்கிறான்; அவனையே வணங்க வேண்டும்; இணைவைக்கக் கூடாது. (தூய தவ்ஹீத்)
- நபி (ஸல்) காட்டிய வழிமுறையில் நடத்தல்.(இத்திபாவுர் ரிஸாலஹ்)
- மௌத்திற்குப் பிந்தைய கேள்வி கணக்கை எண்ணிப் பார்த்தல். (தவ்ஹீத், தூதுத்துவத்திற்குப் பிறகு மறுமை மற்றும் மறுமை சிந்தனை)
- கடமைகளையும் உரிமைகளையும் நிறைவேற்றுதல்.

❖ எந்த சமுதாயத்தையும் ஆரோக்கியமாகக் காண இந்த நான்கு விஷயங்களும் அங்கு இருக்கவேண்டும். இவை இல்லையேல், முழு ஐரோப்பாவிலும் நிலவிடும் broken family system 'குடும்பக் கட்டமைப்பு சிதைவுற்ற' நிலைதான் ஏற்படும். மனித இயல்பின் எதிர்பார்ப்பு, நிறைவேறாத காரணத்தால், அவர்கள் விரக்திக்கு இரையாகியுள்ளார்கள்.1 அங்கு மனிதநேயம், இரக்கம், பந்தபாசம், சகோதரத்துவமெல்லாம் விடுபட்டுவிட்டன.

❖ பலஹீனமான பலர், குறித்து இவ்வத்தியாயத்தில் பேசப்பட்டுள்ளது – உதாரணமாக: அநாதைகள், பெண்கள், அடிமைப் பெண்கள், அடிமைகள், முஸ்லிம்களிடையே மைனாரிட்டியாக வாழுகின்ற பிறமதத்தினர் (அந் நிஸா: 2-9)

❖ பெண்களின் உரிமைக்கான பெரிய ஆதாரம், ஸூரா அந் நிஸா ஆகும்.

## சில தலைப்புகள்
## *Few Topics*

1. மனிதர்கள் யாவருக்கும் மூலம் (தந்தை) ஒருவரே! உறவைப் பேணுதல் பற்றிய பாடம்!!(1)
2. அநாதைகள் பற்றிய சட்டங்கள்; பலதார மணம் - விபரம்; மணக் கொடை (மஹர்) க்கான உத்தரவு. (2-6 )

---

1. படியுங்கள்: அல் ஹுகூக் - இப்னு உஸைமின்,
ஹுகூகுன்வ் வ பராயிள் - ஷைக் ஸலாஹுத்தீன் யூஸுப்

3. வாரிசுதாரர்களுக்கான சட்டங்கள். (7-8 )
4. அநாதைகளின் செல்வத்தை அநியாயமாக சாப்பிடத் தடை (ஹராம்) விபரம். (9-10 )
5. வாரிசுதாரர்களுக்கான சட்டங்கள் ( 11-12)
6. அல்லாஹ்வின் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பேருக்கு, கிடைக்கின்ற நற்கூலியும், மாறுசெய்கிறவர்களுக்கு ஏற்படும் முடிவும். (13-14 )
7. மாற்றப்படுவதற்கு முந்தைய விபச்சாரச் சட்டம். (15-16 )
8. ஏற்றுக் கொள்ளப்படுகின்ற மற்றும் ஏற்கப்படாத தவ்பா (பாவமன்னிப்பு) பற்றிய விபரம். ( 17-18)
9. பெண்களின் உரிமைகள் பற்றிய விபரம். (19-21)
10. திருமணம் செய்யமுடியாத (இரத்த பந்த) உறவினர்கள் விபரம்; 'மஹர்' கொடுத்தல் கட்டாயம் எனும் விபரம்.(22-24)
11. சுதந்திரமானவர்களுக்கு அடிமைப்பெண்களைத் திருமணம் செய்வித்தல் கூடாது; ஆனால் சில நிபந்தனைகளோடு திருமணம் செய்விக்கலாம்.(25)
12. அல்லாஹ் தன் அடியார்களுக்கு, வழங்கிடும் அருட்கொடைகள்.(26-28)
13. முஸ்லிம்களின் உயிர் மற்றும் உடமைகளின் மகத்துவம்.(29-30)
14. பெரும்பாவங்களை விட்டும் தவிர்ந்திடுவது, சிறிய பாவங்கள் மன்னிக்கப்பட காரணமாக அமையலாம்.(35)
15. பேராசையில் திளைத்திருப்பது தடை செய்யப்படுகிறது; நற்செயல்களில் திளைத்திட—களா கத்ரை (விதியைப்) பொருந்தி வாழ உபதேசிக்கப்பட்டுள்ளது. (32-33)
16. குடும்பத்திற்கான சட்டங்கள் பேசப்பட்டுள்ளன.(34-35)
17. அல்லாஹ்வை மட்டும் வணங்குவது மற்றும் அவனுடைய அடியார்களோடு நல்லுறவைப் பேணுவதற்கான உத்தரவு.(36)
18. கஞ்சத்தனம் மற்றும் முகஸ்துதியின் இழிவு.(37-38)
19. அல்லாஹ்வின் நீதி மற்றும் சிறப்பின் விபரம் மற்றும் நிராகரிப்போருக்கான எச்சரிக்கை!(40-42)
20. தொழுகையின் நிபந்தனைகள்(43)
21. யூதர்களின் தீமைகள், வழிகேடுகள் மற்றும் அவைகளுக்கான தண்டனை விபரம்.(44-55)
22. காபிர்களுக்கான தண்டனையும் முஸ்லிம்களுக்கான நற்கூலியும். (56-57)
23. அமானிதத்தை நிறைவேற்றுவதன் அவசியம், நீதிக்கான கட்டளை, அல்லாஹ், அவனது தூதர் மற்றும் அதிகாரமுள்ளவர்களுக்குக் கட்டுப்படுதலுக்கான உத்தரவு.(58-59)

24. நயவஞ்சகர்களின் விபரம்.(60-68)
25. கட்டுப்படுவோருக்கான கூலியும் அவர்களின் அந்தஸ்தும்(69-70)
26. இஸ்லாத்தில் தற்காப்பு, ஜிஹாதின் அடிப்படைகள், முனாபிக்குகளின் நிலைப்பாடு.(71-84)
27. அழகிய சிபாரிசு மற்றும் மோசமான சிபாரிசு பற்றிய விபரம்.(85-86)
28. மறுமை நாள் உண்மையானதாகும்.(87)
29. முனாபிக்-களோடு தொடர்பு கொள்ளும் விஷயத்தில் மக்களில் இரு வகையினர்; அவர்களிடம் நடந்து கொள்ளவேண்டிய விதம்.(88-91)
30. தவறுதலாக மற்றும் வேண்டும் என்றே கொலை செய்வதைப் பற்றிய சட்டங்கள்.(92-93)
31. அல்லாஹ்-வின் சட்டங்களில் (கடைபிடிப்பதில்) மனஉறுதியைக் காட்டவேண்டும்; குறிப்பாக தற்காப்பு யுத்தத்தின்போது! (94)
32. முஜாஹித்களின் சிறப்பு! பலஹீனமானவர்களைத் தவிர மற்றவர்கள் ஜிஹாதில் இருந்து பின்தங்குவதற்கான எச்சரிக்கை! (95-99)
33. இறை வழியில் ஹிஜ்ரத் செய்வதன் சிறப்பு (100)
34. சுருக்கித் தொழுதல் மற்றும் அச்சநிலைத் தொழுகையின் சட்டங்கள். (101-103)
35. நபி (ஸல்) மக்களுக்கு நீதி வழங்கும்போது, நேர்மையுடன் நடப்பதற்கான உத்தரவு. (104-113)
36. நாவின் தீமைகளில் இருந்து தவிர்ந்திட உத்தரவு; இனிய வார்த்தைகளின் சிறப்பு; இரஸூல் (ஸல்) அவர்களின் வழிமுறை மற்றும் மு.்.மின்களின் வழிமுறைக்கு மாற்றமாக நடப்பதன் விளைவு! (114-115)
37. இணைவைப்பு மற்றும் ஷைத்தானின் அபாயங்கள். (116 - 121)
38. ஈமான் மற்றும் நல்லமல்களின் விபரம். (122-126)
39. பெண்கள் மற்றும் சமுதாயங்களுக்கான சில சட்டங்கள்.(127-130)
40. ஒவ்வொரு பொருளையும் உரிமை கொண்டாடுவதில் அல்லாஹ்வின் தனித்தன்மை (131-134)
41. நீதியைக் கடைபிடிக்க உத்தரவு; ஈமான் மற்றும் அதன் முக்கியமான அம்சங்கள். (135-136)
42. முனாபிக்-கள் விபரம்; காபிர்களோடு (ஆழ்ந்த) நட்பு கொள்ளத் தடை! (137-147)
43. பாதிக்கப்பட்டவன் அநியாயக்காரனால் விளைந்த, பாதிப்பை எடுத்துக் கூறலாம். (148-149)
44. காபிர்களின் சில செயல்பாடுகளும் அவற்றிற்கான தண்டனைகளும். (150-151)

45. மு.்.மின்களின் செயல் மற்றும் அதற்கான நற்கூலி. (152)
46. நபிமார்களோடு பனூ இஸ்ராயீல்கள் நடந்துகொண்ட விதம்; அவர்களின் ஒப்பந்த மீறல்; அவர்களின் தண்டனை விபரம். (153-161)
47. பனூ இஸ்ராயீல்களில் இருந்த விசுவாசிகளின் விவரம் (162)
48. இறைத் தூதர்கள் அனைவருக்கும் ஒரே வஹீ அருளப்பட்டிருக்கிறது; அதன் சூட்சுமம் 163-166
49. காபிர்களுக்கானத் தண்டனை (167-170)
50. வேதம் கொடுக்கப்பட்டவர்கள், மார்க்க விஷயத்திலும், ஈஸா (அலை) விஷயத்திலும் வரம்பு மீற தடை (171-173)
51. சகோதரர்களுக்கான சொத்துப் பங்கீடு சட்டங்கள். (176)

## சில பாடங்கள
## *Few Lessons*

1. ஐரோப்பாவில் 1945 க்குப் பிறகுதான் பெண்ணுரிமை குறித்த சட்டங்கள் இயற்றப்பட்டன. ஆனால் 14 நூற்றாண்டுகளுக்கு முன்பே, இது இஸ்லாமியக் கல்வியின் பிரிக்கமுடியாத அம்சமாக ஆகிவிட்டது. 1
2. பெண்களோடு நல்ல முறையில் நடந்திட வழிகாட்டுதல் தரப்பட்டுள்ளது. 19-21, 34
3. உள்ளார்ந்த பிரச்சினை மற்றும் வெளிப் பிரச்சினைகளுக்கான தீர்வு தரப்பட்டுள்ளது.
4. குடும்பம் முதல் சமுதாயம் வரை, உள்கட்ட அமைதி முதல் வெளிப்புற சூழல் வரை, மற்றும் தேசிய அளவிலான அமைதி வரை விளக்கப்பட்டிருக்கிறது. .
5. கடமைகளும், பொறுப்புகளும் (கவனிக்கப்படுவது) ஒரு நல்ல சமுதாயத்திற்கு ஆணிவேராகும்.
6. இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தில் ஒரே மனிதர் மூலமாக படைக்கப்பட்டார்கள் எனச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால் ஒருவர் இன்னொருவர் மீது எப்படி அநீதம் செய்யமுடியும். 2
7. ‘அந்நிஸா’ எனும் பெயரை, இவ்வத்தியாயம் பெற்றிருப்பது, உண்மையில் ‘தாய்க்குல கௌரவ’-த்தின் அடையாளம் ஆகும், இதற்குக் காரணம், பெண்கள் மனித குலத்தின் முக்கியமான

---

1. தக்ரீமுல் மர்அதி பில் இஸ்லாம் - முஹம்மது ஜமீல் ஜைனு, (நிஸாவுன் ய.்.திக்னல் இஸ்லாம்- Dr.அப்துல் மு.்.தீ அத்தாலாதீ
2. விரிவான விபரங்களுக்கு தப்ஸீர் இப்னு கஸீர் பககம் 206 பார

பகுதியாக இருக்கின்றனர்; வாலிபம் வரும் வரை குழந்தைகளை வளர்த்து அவர்களே ஆளாக்குகின்றனர்.

8. குழந்தை வளர்ப்பின் பொறுப்பு, குழந்தை பிறந்தபிறகு அல்ல; குழந்தையின் தாயைத் தேர்ந்தெடுக்கும் நாள் முதல் ஆரம்பமாகிவிடுகிறது.
9. இந்த அத்தியாயத்தின் வசனங்கள் (பொதுவாக) அல்லாஹு தஆலாவின் திருப்பெயர்களில் முடிவடைவது, இவ்வத்தியாயத்தின் ஒரு சிறப்பம்சம் ஆகும். சற்றொப்ப 42 பெயர்கள் இவ்வாறு இடம் பெற்றுள்ளன. இந்த திருப்பெயர்கள், நீதியை நிர்ணயிப்பவை; எனவே நீதிக்கு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது.
10. அல்லாஹ் நம்முடைய படைப்பாளனாக (காலிக்), அதிபதியாக (மாலிக்), நிர்வாகியாக (முரப்பீ) இருக்கும்போது, நம்முடைய வணக்கம் மற்றும் கட்டுப்படுதலும் கூட, அவனுக்காக மட்டுமே இருக்கவேண்டும்.
11. அநாதைகளின் செல்வத்தை தவறான முறையில் உண்ணுவது ‘பாவம்’ ஆகும்.
12. செல்வத்தை செலவு செய்பவர் சுயஅறிவு உள்ளவராக இருக்க வேண்டும்.
13. காணாமல் போனவர்களுடைய செல்வங்கள், ‘மரணித்தவர் சொத்துப் பங்கீட்டு’ முறையில் பாதுகாக்கப்படுகிறது.
14. ஷரீஅத் சட்டங்கள் அல்லாஹ்வின் (ஞானம் மற்றும்) சூட்சுமத்தின் மீது அமைக்கப்பட்டுள்ளன!.
15. பெண்களின் செல்வம் மற்றும் உரிமைகளைப் பேணுவது அவசியம் ஆகும்.
16. அல்லாஹு தஆலாவின் சட்டங்களில், கடுமை கிடையாது. ஏனெனில் மனிதன் பலஹீனமானவன்.
17. வெற்றிகரமான பாதை, தனித்தவனான - இணையில்லாத – அல்லாஹ்வை அடிபணிந்து நடந்திடும் பாதையாகும்.
18. ‘ஷிர்க்’-மன்னிக்க முடியாத குற்றம் ஆகும்.
19. அல்லாஹ் மற்றும் அவனது தூதருக்குக் கட்டுப்படுதல் கட்டாயமானதர்கும். உலமாக்கள் மற்றும் தலைவர்களுக்குக் கட்டுப்படுவதோ நிபந்தனைகளுக்குட்பட்டு கட்டாயமானதாகும்.
20. இஸ்லாத்தைப் பாதுகாக்க சாத்தியமான ஆயுதங்கள் அனைத்தையும், தயாராக வைத்திருக்க திருக்குர்ஆன் வழிகாட்டுகிறது.
21. திருக்குர்ஆன் அனைத்து விதமான முரண்பாடுகளில் இருந்தும் தூய்மையானதாகும்.
22. கருத்து வேறுபாடு எழும்போது, திருக்குர்ஆன் மற்றும் ஸுன்னா

– நபி (ஸல்) வழிமுறை நோக்கித் திரும்பவேண்டும்.

23. ஒரு முஸ்லிம் தக்வா - இறையச்சம், மற்றும் தஹாரஹ் - தூய்மை அடிப்படையிலான வாழ்க்கை வாழவேண்டும்.
24. நற்கூலியும் வெகுமதியும் (அமல்களின்) எண்ணத்தைப் பொறுத்தே அமைகின்றன.
25. யுத்த நேரத்திலும் தொழுகையை ஜமாஅத்தாகத் தொழவேண்டும்.
26. அமைதி நிலவும் சூழலிலும், குறித்த நேரத்தில் தொழுவது கட்டாயம் ஆகும்.
27. மக்களுக்கு மத்தியில் இணக்கத்தை ஏற்படுத்துவது மிகப்பெரிய நன்மையாகும்.
28. நபி(ஸல்) அவர்களின் வழிமுறை மற்றும் நபித்தோழர்கள் விளக்கவுரைகளின்படி செல்வது கட்டாயமாகும்.
29. ஈமானும் நல்ல அமல்களும் சொர்க்கத்தின் திறவுகோல் ஆகும்.
30. உடலமைப்பில் மாற்றம் செய்தல் ஷைத்தானின் செயல் ஆகும்.
31. ஈமானும் நல்ல அமலும் இன்றி வெற்று எதிர்பார்ப்புகளால் சொர்க்கத்தைப் பெற இயலாது.
32. கலீலுல்லாஹ் (அல்லாஹ்வின் தோழர்) இப்றாஹீம் (அலை) அவர்களைப் பின்பற்ற நபி (ஸல்) அவர்களுக்குக் கட்டளையிடப்பட்டது.
33. அநாதைப் பெண்களைப் பராமரிப்பவர் அவர்களைத் திருமணம் செய்யலாம்; மஹர் கட்டாயம்.
34. ஒரு கணவன் தன் மனைவியருக்கு மத்தியில் நீதியுடன் நடக்கவேண்டும்.
35. அல்லாஹு தஆலா அனைத்திற்கும் ஆற்றல் பெற்றவன்; அவனுக்கு மாறுசெய்யாதீர்.
36. உண்மையான சாட்சியை மறைக்கலாகாது; யாருக்கு எதிராக இருப்பினும் சரியே!
37. காபிர்களோடும் முனாபிக்-களோடும் நெருக்கம் காட்டுதலில் இழிவு உண்டு.
38. பாவகரமான சபைகளில் கலந்து கொள்வதும் கூட பாவமானதாகும்; சீர்படுத்தும் நோக்கில் இல்லாமல் இருந்தால்..!
39. ஒரு முஃமினுடைய அகமும் புறமும் ஒன்று போல் இருக்கவேண்டும்.
40. ஒரு முனாபிக்கின் தவ்பா ஏற்கப்பட, அவர் தூய எண்ணத்துடன் - தன் சொல் செயல்களைச் சீர்படுத்துதல் நிபந்தனையாகும்.
41. காபிர்களுடனான நட்புறவிற்குத் தடை இருக்கிறது.
42. அநியாயத்தை எடுத்துரைப்பதைத் தவிர தீயவைகளைப்

பேசுவது ஹராம.

43. வேதம் கொடுக்கப்பட்டவர்களோடு உலக காரியங்களில் தொடர்புகளை வைத்துக் கொள்ளமுடியும்.
44. எந்தக் கல்வியின் அடிப்படை அல்லாஹ்வின் நெருக்கமாக இருக்குமோ, அது பயனுள்ள கல்வியாகும்.
45. சத்தியத்திற்கும், மறுமை வெற்றிக்கும் தடையாக இருக்கும் கல்வி, அனுமதிக்கப்பட்டதன்று.
46. மார்க்கத்தில் வரம்பு மீறுவது, சத்தியமார்க்கத்தை விட்டும் திசை திரும்புவதாகும்.
47. ஈஸா (அலை) மற்றும் வானவர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அடியார்களே!
48. ஈஸா (அலை) அவர்களை அல்லாஹ் என்றோ அல்லாஹ்வின் மகன் என்றோ கூறுவது, அவர்களின் அந்தஸ்தில் غلو வரம்பு மீறுதல் ஆகும்.
49. மனிதன் எப்பொழுதெல்லாம் தன்னிலை மறக்கின்றானோ, அப்பொழுது அவனை தர்ஙீப் - ஆசையூட்டும் நற்செய்திகள், தர்ஹீப் - பயமுறுத்தும் எச்சரிக்கைகள் மூலமாக சீர்திருத்தவேண்டும்.

## தொடர்பு
## நுட்பமான விரிவுரைகள்

- ஸூரா அந்நிஸாவில் யூதர்கள் பற்றி அதிகம் பேசப்படுகிறது; அல் மாயிதாவிலோ கிறித்தவர்கள் பற்றி அதிகம் பேசப்படுகிறது.
- அந்நிஸா அத்தியாயத்தை மட்டும் மொழிபெயர்த்து, ஐரோப்பியர்களிடம் தந்தால் அதுவே அதிகமான மக்களின் நேர்வழிக்கு வழிவகுத்திடும்; குடும்ப அமைப்பு முறை சீர்குலைந்ததன் (Broken family system) காரணமாக, கவலை மற்றும் மன அழுத்தத்திற்குப் (depression) பலியாகிக் கிடக்கின்ற மக்களுக்குப் பின் வரும் இவ்விஷயம் புரிய வேண்டும்: ‘அல்லாஹ்வால் இறக்கியருளப்பட்ட ஒழுங்கமைப்பே, இந்த அல்லாஹ்வின் பூமிக்கு, தேவையான suitable ஒழுங்கமைப்பு ஆகும். மனிதர்களால் புனையப்பட்ட ஒழுங்கமைப்பு, இந்த பூமிக்கு, பொருத்தமான suitable ஒழுங்கமைப்பு அல்ல..!’ இவ்விஷயத்தை உண்மைப் படுத்த, நான் ஏன் முஸ்லிமானேன்? என்ற தலைப்பிலுள்ள இஸ்லாத்தைத் தழுவியவர்களின் காவியங்களைப் படியுங்கள்!

❖ பரஸ்பரம் ஒருவருக்கொருவர் உதவி செய்யும் தன்மையின் மீது எழுப்பப்பட்ட ஒரு சமூக அமைப்பைக் (Cooperative society) காணத் தேவையான அடிப்படைகள் அனைத்தும், அந்நிஸா அத்தியாயத்தில் சொல்லப்பட்டுள்ளன.

அழைப்புப் பணி, சீர்திருத்தப்பணி, மனப்பக்குவம், மற்றும் நினைவூட்டலுக்காக – சிந்திக்கவும் மனனமிடவும் உகந்த இறைவசனங்கள் மற்றும் நபிமொழி ..!

## திருக்குர்ஆன்

يَا أَيُّهَا النَّاسُ اتَّقُوا رَبَّكُمُ الَّذِي خَلَقَكُم مِّن نَّفْسٍ وَاحِدَةٍ وَخَلَقَ مِنْهَا زَوْجَهَا وَبَثَّ
مِنْهُمَا رِجَالًا كَثِيرًا وَنِسَاءً ۚ وَاتَّقُوا اللَّهَ الَّذِي تَسَاءَلُونَ بِهِ وَالْأَرْحَامَ ۚ
إِنَّ اللَّهَ كَانَ عَلَيْكُمْ رَقِيبًا 4:1

4:1.மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள், அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான், அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான் பின்னர் இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான் ஆகவே, அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள் அவனைக்கொண்டே நீங்கள் ஒருவருக்கொருவர் (தமக்குரிய உரிமைகளைக்) கேட்டுக் கொள்கிறீர்கள் மேலும் (உங்கள்) இரத்தக் கலப்புடைய உறவினர்களையும் (ஆதரியுங்கள்) - நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது கண்காணிப்பவனாகவே இருக்கின்றான்.

إِنَّ اللَّهَ لَا يَغْفِرُ أَن يُشْرَكَ بِهِ وَيَغْفِرُ مَا دُونَ ذَٰلِكَ لِمَن يَشَاءُ ۚ
وَمَن يُشْرِكْ بِاللَّهِ فَقَدِ افْتَرَىٰ إِثْمًا عَظِيمًا

4:48.நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணைவைப்பதை மன்னிக்கமாட்டான் இதைத்தவிர, (மற்ற) எதையும் தான் நாடியவர்களுக்கு மன்னிப்பான் யார் அல்லாஹ்வுக்கு இணைவைக்கிறார்களோ அவர்கள் நிச்சயமாக மிகவும் பெரிய பாவத்தையே கற்பனை செய்கின்றார்கள்.

## அல்ஹதீஸ்

முஅவியா பின் ஜாஹிமஹ் அஸ்ஸலமிய்யி கூறுகிறார்கள்: ‘‘ஜாஹிமஹ் (ரலி), நபி (ஸல்) அவர்களிடத்தில் வந்தார்கள். ‘அல்லாஹ்வின் தூதர் அவர்களே! ஜிஹாத் செய்ய விரும்புகிறேன்; உங்களிடம் ஆலோசனை செய்வதற்காக வந்துள்ளேன்!’ என்றார்கள். அதற்கு நபி (ஸல்), ‘உமக்குத் தாய் உண்டுமா? ’ என வினவினார்கள். அதற்கு அவர்கள் ‘ஆம்’ என்றார்கள். நபி (ஸல்) அதற்கு, ‘அவர்களைப் பற்றிப் பிடித்து (சேவை செய்து) வருக! நிச்சயமாக சொர்க்கம் அவர்களுடைய (அந்தத் தாயாருடைய) இரு பாதங்களுக்குக் கீழே இருக்கிறது’ என்றார்கள்”. (ஸுனன் அந்நஸயி 3106 - ஸஹீஹ்)



# سُوْرَةُ الْمَائِدَةِ

# ஸூரதுல் மாயிதா
# உணவுத் தட்டு

5

இது 'மதனீ'
ஸூரா ஆகும்.

## சில நோக்கங்கள்
## *Few Objectives*

- ❖ இந்த ஸுராவின் நோக்கம், ஒப்பந்தங்களையும் வாக்குறுதிகளையும் பேணுவதாகும்.1
- ❖ வீடு, சமூகம், சமுதாயம், உலகம், வாழ்க்கை சார்ந்த பிரச்சினைகள் மற்றும் தீவிரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவருதல், என அனைத்திற்கும் திட்டமிடுதல் (Programming) அவசியம் ஆகும். இது மறுமையின் கேள்வி கணக்கு பற்றிய பயத்தின் மூலமாகவே சாத்தியமாகும். (5:32)
- ❖ சமுதாயத்தை அல்லாஹ்வால் அருளப்பட்ட வழிமுறையின்படி கொண்டுசெல்ல கற்பிக்கப் பட்டிருக்கிறது.
- ❖ கிறித்தவர்களுடைய கொள்கைக்கான மறுப்பு மற்றும் ஏகத்துவத்தின் மீது ஆசைகொள்வது பற்றி அதிகம் பேசப்பட்டுள்ளது.
- ❖ 5:32. இதன் காரணமாகவே, "நிச்சயமாக எவன் ஒருவன் கொலைக்குப் பதிலாகவோ அல்லது பூமியில் ஏற்படும் குழப்பத்தை(த் தடுப்பதற்காகவோ) அன்றி, மற்றொருவரைக் கொலை செய்கிறானோ அவன் மனிதர்கள் யாவரையுமே கொலை செய்தவன் போலாவான் மேலும், எவரொருவர் ஓராத்மாவை வாழ வைக்கிறாரோ அவர் மக்கள் யாவரையும் வாழ வைப்பவரைப் போலாவார்" என்று இஸ்ராயீலின் சந்ததியினருக்கு விதித்தோம். மேலும், நிச்சயமாக நம் தூதர்கள் அவர்களிடம் தெளிவான அத்தாட்சிகளைக் கொண்டு வந்தார்கள் இதன் பின்னரும் அவர்களில் பெரும்பாலோர் பூமியில் வரம்பு கடந்தவர்களாகவே இருக்கின்றனர்
- ❖ ஹராம் - ஹலால், ஏவல் - விலக்கல் மற்றும் அறியாமைக்கால சட்டங்கள் குறித்தும் சொல்லப் பட்டுள்ளது.

## சில தலைப்புகள்
## *Few Topics*

1. ஹராம் - ஹலால் மற்றும் ஒப்பந்தங்கள் - வாக்குறுதிகள் பேணுவது பற்றிய விபரங்கள்.
2. 'உளு' (அங்க சுத்தி) செய்தலின் அவசியம், பிறகு குளிப்பு, மற்றும் தண்ணீர் கிடைக்காத நிலையில், 'தயம்மம்' விபரங்கள்.
3. அருட்கொடைகள் (நி.்.மத்துகள்) மூலமாக உபதேசிக்கப்

1. தப்ஸீர் அத்தபரீ பக்கம்-447-449

பட்டுள்ளது; தீர்ப்பு மற்றும் சாட்சி சொல்வதில், நீதியை நிலை நாட்ட உத்தரவிடப்பட்டுள்ளது.

4. வேதம் கொடுக்கப்பட்டவர்களின் சில நிலைமைகள் மற்றும் அவர்களின் ஒப்பந்த மீறல் பற்றிய விபரம்
5. மனித குலத்திற்கு நேர்வழிகாட்டக் கூடிய திருக்குர்ஆன் மற்றும் நபி (ஸல்) அவர்களின் வழிமுறைகள், மூலமாக வேதம் கொடுக்கப்பட்டவர்களுக்கு உபதேசிக்கப்பட்டிருக்கிறது.
6. வேதம் கொடுக்கப்பட்டவர்களுடைய சில ஆட்சேபனைகளும் அவைகளுக்கான மறுப்பும்!
7. யூதர்களின் நபி 'மூஸா' (அலை) குறித்து, அவர்களின் நிலைப்பாடு!
8. 'ஹாபீல்' , 'காபீல்' உடைய சரித்திரம் மற்றும் முதல் கொலை பற்றிய விபரம்!
9. கொலை மற்றும் குழப்பம் விளைவிப்பதற்கு உரிய தண்டனை விபரம்.
10. நல்லறங்கள் மூலமாக அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதன் சிறப்பு.
11. மறுமை நாளில் காபிர்களுக்குக் கிடைக்கும் தண்டனையின் விபரம்.
12. திருட்டு மற்றும் அதற்கான தண்டனை விபரம்.
13. காபிர்கள், முனாபிக்குகள், யஹூதிகள் ஆகியோருக்கு உரிய தண்டனைகள்.
14. தவ்றாத், இன்ஜீல், மற்றும் திருக்குர்ஆன் ஆகிய அனைத்து இறை வேதங்களும் ஒன்றை ஒன்று உண்மைப்படுத்துகின்றன. முந்தைய வேத (சட்ட) ங்களைத் திருக்குர்ஆன் மாற்றிவிட்டது; இதன் அடிப்படையிலான தீர்ப்பு கட்டாயமானதாகும்.
15. விசுவாசம் கொள்ளாதவர்களோடு, (முஸ்லிம்களுக் கெதிராக) நட்பு பாராட்டத் தடை; இரஸூல் (ஸல்) அவர்கள் மற்றும் முஸ்லிம்களோடு நேசம் கொள்வதற்கான உத்தரவு!
16. வேதம் கொடுக்கப்பட்டவர்களுடைய மோசமான வழக்கங்கள்; குறிப்பாக மு.ஃ.மின்களோடும் தம்மைப் படைத்தவனோடும் யூதர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றி பேசப்பட்டுள்ளது.
17. அல்லாஹ்வுக்கு வேதம் கொடுக்கப்பட்டவர்கள் இணைவைத்தல்.
18. மார்க்கத்தில் வரம்பு மீற, வேதம் கொடுக்கப்பட்டவர்களுக்குத் தடை! மறுப்போர் சபிக்கப்பட்டுள்ளார்கள்!
19. யூதர்களும், இணைவைப்பவர்களும் பகை கொள்வதில் கடுமையானவர்கள்; கிறித்தவர்களே முஸ்லிம்களுக்கு மிக நெருக்கமானவர்க்ள்!
20. அல்லாஹ் அனுமதித்தவை யாவும் தூய்மையானவையே!

அவைகளை உண்ணுக! அவைகளை ஹராம் என்றிடத் தடை!!

21. சத்தியம் செய்தல் பற்றிய சட்டமும், அச்சத்திய முறிப்பிற்கான பரிகாரமும்.
22. மது, சூதாட்டம், அன்ஸாப் (சிலைவணக்கம்), அச்லாம் (குறி கேட்கும் அம்புகள்), ஆகியவைகளுக்கான தடையும் தவ்பா – பாவமன்னிப்பின் சிறப்பும்.
23. இஹ்ராம் - உடைய நிலையில் வேட்டையாடுவது பற்றிய சட்டங்கள் மற்றும் கண்ணியமான மாதங்கள் பற்றிய விபரம்.
24. மேலதிகமாகக் கேள்வி கேட்கத் தடை; அறியாமைக்கால வழிகேடுகள்; அவைகளால் முஸ்லிம்கள் ஏமாறுவதில் இருந்து, தடுக்கப்படுதல்.
25. மரண சாஸனத்தின் போது சாட்சி வைத்திருக்க உத்தரவு!
26. நபிமார்களிடத்தில், அவர்களின் உம்மத்தினர் தந்த பதில் குறித்து, மறுமையில் கேள்வி!
27. ஈஸா(அலை) அவர்களின் அற்புதங்கள்; விண்ணில் இருந்து இறங்கிய உணவுத்தட்டு விபரம் .
28. ஈஸா (அலை) மற்றும் அல்லாஹு தஆலாவிற்கிடையே நடந்த உரையாடல்.
29. மறுமை நாளில் உண்மையாளர்களுக்குக் கிடைக்கின்ற நற்கூலி; அல்லாஹ்வின் வல்லமைக்கான சில ஆதாரங்கள்.

## சில பாடங்கள்
## *Few lessons*

1. இவ்வத்தியாயத்தில் ஷரீஅத்தின் 5 நோக்கங்கள் பேசப்பட்டுள்ளன. அவையாவன:- 1

### ❖ மார்க்கப் பாதுகாப்பு:

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا مَن يَرْتَدَّ مِنكُمْ عَن دِينِهِ فَسَوْفَ يَأْتِي اللَّهُ بِقَوْمٍ يُحِبُّهُمْ
وَيُحِبُّونَهُ أَذِلَّةٍ عَلَى الْمُؤْمِنِينَ أَعِزَّةٍ عَلَى الْكَافِرِينَ
يُجَاهِدُونَ فِي سَبِيلِ اللَّهِ وَلَا يَخَافُونَ لَوْمَةَ لَائِمٍ ذَٰلِكَ فَضْلُ اللَّهِ يُؤْتِيهِ
مَن يَشَاءُ وَاللَّهُ وَاسِعٌ عَلِيمٌ (٥٤)

மு.்.மின்களே! உங்களில் எவரேனும் தன் மார்க்கத்தைவிட்டு மாறிவிட்டால் (அல்லாஹ்வுக்கு அதனால் நஷ்டமில்லை) அப்பொழுது அல்லாஹ் வேறு ஒரு கூட்டத்தாரைக் கொண்டு

1. இமாம் ஷாதிபியின் நூல்கள் - இ.்.திஸாம் மற்றும் முவாபகாத் The legislation Guarding the five necessities – Abdul Kareem zidaan and Dr.A.Hakam Zummo Al-Aqily

வருவான் அவன் அவர்களை நேசிப்பான். அவனை அவர்களும் நேசிப்பார்கள். அவர்கள் மு.்.மின்களிடம் பணிவாக நடந்து கொள்வார்கள் கா.்.பிர்களிடம் கடுமையாக இருப்பார்கள் அல்லாஹ்வின் பாதையில் போர் செய்வார்கள் நிந்தனை செய்வோரின் நிந்தனைக்கு அஞ்சமாட்டார்கள் இது அல்லாஹ்வின் அருட்கொடையாகும் இதை அவன் நாடியவருக்குக் கொடுக்கின்றான் அல்லாஹ் மிகவும் விசாலமானவனும் (எல்லாம்) நன்கறிந்தவனுமாக இருக்கின்றான். (05:54)

## ❖ உயிர்ப் பாதுகாப்பு:

مِنْ أَجْلِ ذَلِكَ كَتَبْنَا عَلَى بَنِي إِسْرَائِيلَ أَنَّهُ مَنْ قَتَلَ نَفْساً بِغَيْرِ نَفْسٍ
أَوْ فَسَادٍ فِي الأَرْضِ فَكَأَنَّمَا قَتَلَ النَّاسَ جَمِيعاً
وَمَنْ أَحْيَاهَا فَكَأَنَّمَا أَحْيَا النَّاسَ جَمِيعاً وَلَقَدْ جَاءَتْهُمْ رُسُلُنَا بِالْبَيِّنَاتِ
ثُمَّ إِنَّ كَثِيراً مِنْهُمْ بَعْدَ ذَلِكَ فِي الأَرْضِ لَمُسْرِفُونَ (٣٢)

இதன் காரணமாகவே, “நிச்சயமாக எவன் ஒருவன் கொலைக்குப் பதிலாகவோ அல்லது பூமியில் ஏற்படும் குழப்பத்தை(த் தடுப்பதற்காகவோ) அன்றி, மற்றொருவரைக் கொலை செய்கிறானோ அவன் மனிதர்கள் யாவரையுமே கொலை செய்தவன் போலாவான் மேலும், எவரொருவர் ஓராத்மாவை வாழ வைக்கிறாரோ அவர் மக்கள் யாவரையும் வாழ வைப்பவரைப் போலாவார்” என்று இஸ்ராயீலின் சந்ததியினருக்கு விதித்தோம். மேலும், நிச்சயமாக நம் தூதர்கள் அவர்களிடம் தெளிவான அத்தாட்சிகளைக் கொண்டு வந்தார்கள் இதன் பின்னரும் அவர்களில் பெரும்பாலோர் பூமியில் வரம்பு கடந்தவர்களாகவே இருக்கின்றனர்.(05:32)

## ❖ கண்ணியத்தின் பாதுகாப்பு

الْيَوْمَ أُحِلَّ لَكُمْ الطَّيِّبَاتُ وَطَعَامُ الَّذِينَ أُوتُوا الْكِتَابَ حِلٌّ لَكُمْ وَطَعَامُكُمْ
حِلٌّ لَهُمْ وَالْمُحْصَنَاتُ مِنْ الْمُؤْمِنَاتِ وَالْمُحْصَنَاتُ مِنْ الَّذِينَ أُوتُوا الْكِتَابَ مِنْ قَبْلِكُمْ
إِذَا آتَيْتُمُوهُنَّ أُجُورَهُنَّ مُحْصِنِينَ غَيْرَ مُسَافِحِينَ وَلا مُتَّخِذِي أَخْدَانٍ وَمَنْ يَكْفُرْ
بِالإِيمَانِ فَقَدْ حَبِطَ عَمَلُهُ وَهُوَ فِي الآخِرَةِ مِنْ الْخَاسِرِينَ (٥)

இன்றைய தினம் உங்களுக்கு (உண்ண) எல்லா நல்ல தூய பொருட்களும் ஹலாலாக்கப் பட்டுள்ளன் வேதம் கொடுக்கப்பட்டோரின் உணவும் உங்களுக்கு ஹலாலானதே் உங்களுடைய உணவும் அவர்களுக்கு (சாப்பிட) ஆகுமானதே, மு.்.மின்களான கற்புடைய பெண்களும், உங்களுக்கு முன்னர் வேதம் அளிக்கப்பட்டவர்களிலுள்ள கற்புடைய பெண்களும் விலைப்

பெண்டிராகவோ, ஆசை நாயகிகளாகவோ வைத்துக் கொள்ளாது, அவர்களுக்குரிய மஹரை அவர்களுக்கு அளித்து, மண முடித்துக் கொள்வது உங்களுக்கு அனுமதிக்கப் பட்டுள்ளது மேலும் எவர் ஈமானை நிராகரிக்கிறாரோ, அவருடைய அமல் (செயல்) அழிந்து போகும் - மேலும் அவர் மறுமையில் நஷ்டமடைந்தோரில் ஒருவராகவே இருப்பார். (05:05)

### ❖ செல்வப் பாதுகாப்பு

وَالسَّارِقُ وَالسَّارِقَةُ فَاقْطَعُوا أَيْدِيَهُمَا جَزَاءً بِمَا كَسَبَا نَكَالاً مِنَ اللَّهِ وَاللَّهُ عَزِيزٌ حَكِيمٌ (٣٨)

திருடனோ திருடியோ அவர்கள் சம்பாதித்த பாவத்திற்கு, அல்லாஹ்விடமிருந்துள்ள தண்டனையாக அவர்களின் கரங்களைத் தரித்து விடுங்கள். அல்லாஹ் மிகைத்தவனும், ஞானம் மிக்கோனுமாக இருக்கின்றான். (05:38)

### ❖ அறிவுப் பாதுகாப்பு

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا إِنَّمَا الْخَمْرُ وَالْمَيْسِرُ وَالأَنصَابُ وَالأَزْلاَمُ رِجْسٌ مِنْ عَمَلِ الشَّيْطَانِ
فَاجْتَنِبُوهُ لَعَلَّكُمْ تُفْلِحُونَ (٩٠)

ஈமான் கொண்டோரே! மதுபானமும், சூதாட்டமும், கற்சிலைகளை வழிபடுதலும், அம்புகள் எறிந்து குறி கேட்பதும், ஷைத்தானின் அருவருக்கத்தக்க செயல்களிலுள்ளவையாகும் ஆகவே நீங்கள் இவற்றைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் - அதனால் நீங்கள் வெற்றியடைவீர்கள். (05:90)

2. ஒப்பந்தங்களையும் வாக்குறுதிகளையும் நிறைவேற்றுதல் ஈமானின் தேட்டமாகும்.
3. நன்மையான மற்றும் அறப்பணிகளில் உதவி புரிவது, இறையச்சத்தின் அடையாளமாகும்.
4. இஸ்லாமிய மார்க்கம், அல்லாஹ்விற்கு விருப்பமான மார்க்கமாகும்; அது பரிபூரணமானதும் ஆகும்.
5. ஹராம் மற்றும் ஹலாலைப் பிரித்தறிவது, அல்லாஹ் மற்றும் அடியார்களுக்கிடையே உள்ள ஒப்பந்தமாகும்.
6. இஸ்லாம் தூய்மையை விரும்புகின்ற மார்க்கமாகும்; எனவே குளிப்பு, ஒழு, மற்றும் தயம்மத்திற்கான கட்டளைப் பிறப்பிக்கிறது.
7. வணக்கம், வழிபாடு, மற்றும் கொடுக்கல் வாங்கலில் இஸ்லாமிய வழிகாட்டல் முழுமையானதாகும். இவைகளைக் கூட்டவோ குறைக்கவோ முடியாது.
8. ஒப்பந்தத்தை முறித்தல் யூதர்களின் வழக்கமாகும்.

9. நபி (ஸல்) அவர்கள் நபியாக அனுப்பப்பட்ட நோக்கம், முந்தைய மார்க்கங்களின் நல்ல வழிமுறைகளுக்கு மீண்டும் உயிரூட்டுவதாகும்.
10. ஈஸா (அலை) அவர்களை அல்லாஹ்வின் மகன் என்றுரைப்பது ‘குப்ரு’ ஆகும். அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் அவனது திருத்தூதரும் ஆவார்கள்.
11. அல்லாஹ்விற்கு மாறுசெய்வோர் அல்லாஹ்வின் அன்பைப் பெற இயலாது. யூதராக – கிறித்தவராக இருப்பினும் சரியே!
12. யூதர்கள் அல்லாஹ்வையோ இறைத் தூதுவர்களையோ அல்லது வானவர்களையோ மதிப்பதில்லை.
13. யூதர்கள் தந்த நெருக்கடிகளால்தான் மூஸா (அலை), அந்த (தன்) சமூகத்தை விட்டும் தன்னைப் பிரித்திடப் பிரார்த்தனை செய்தார்கள்.
14. தனிமனித உயிரின் மதிப்பும் மரியாதையும், இஸ்லாமிய வழிகாட்டுதல்களில் மட்டுமே உள்ளன.
15. அல்லாஹ்வின் சட்டங்களை ‘செவியுற்றோம் - கட்டுப்பட்டோம்’ எனச் சொல்லி ஏற்றிடுதல் கட்டாயமானதாகும்.
16. அல்லாஹ்வின் தீர்ப்புகளில் திருப்தியுறுவது, விசுவாசத்தின் அடையாளமாகும்.
17. நபிமார்களையும் இரஸூல் மார்களையும் அனுப்பியது, அல்லாஹ்வின் அருளாகும்.
18. யூதர்கள் மற்றும் நஸாராக்கள் உடன் நட்பு கொண்டாடுதல் தவறான பாதை மற்றும் வழிகேட்டிற்கு வழிவகுக்கும்.
19. யூதர்களோடும் நஸாராக்களோடும் நட்பு பாராட்ட இயலாது; ஏனெனில் அவர்கள் யாருக்குமே நலம் நாடமாட்டார்கள்.
20. யூதர்கள் அல்லாஹ்வையே அலட்சியப்படுத்துகின்றபோது, விசுவாசிகளை எப்படிப் பொருட்படுத்துவார்கள்?
21. விசுவாசிகளுக்குக் கடும்பகைவர்கள் யூதர்களும் முஷ்ரிக்குகளும்தான்.
22. மார்க்கத்தை விட்டு, வேதம் அருளப்பெற்றவர்கள் விலகி நிற்பது, அல்லாஹ்வின் பார்வையில, அவர்களைக் கோபத்திற்குரியவர்களாக ஆக்கிவிட்டது.
23. ஈமான் - விசுவாசம் கொண்டவர்கள்தான் அல்லாஹ்வின் உண்மையான ‘வலீ’ (இறை நேசர்) மற்றும் நண்பர்கள் ஆவர்.
24. இந்த சமுதாயத்தின் சீர்திருத்தம், ஏகத்துவம் (ஓரிறைக் கொள்கை) மற்றும் தூய முறையில் ஸுன்னாவைப் பின்பற்றுதல் மூலமாக சாத்தியமாகும்.
25. சத்தியமான அழைப்பாளர்களை, அல்லாஹ் பாதுகாப்பான்.
26. நன்மையை ஏவுதல் மற்றும் திமையைத் தடுத்தலைத் தவிர்ப்பது,

அல்லாஹ்வின் சாபத்திற்கும், வேதனைக்கும் காரணமாகும்.

27. ஈஸா (அலைஹிஸ்ஸலாம்) மனித (த் தன்மையுள்ளவ) ராக இருந்தது, அவர்கள் இறைத் தூதரில்லை என்பதன் மிகப்பெரிய ஆதாரமாகும்.
28. தூய்மையான உணவை அல்லாஹ் ஆகுமாக்கியுள்ளான்.
29. ஷைத்தான் மனிதர்களை, மதுவாலும் சூதாட்டத்தாலும் அல்லாஹ் மற்றும் அவன் நினைவில் இருந்து மறக்கடிக்க விரும்புகிறான்.
30. அசுத்தம் அதிக அளவில் இடம் பெற்றாலும், அது சுத்தத்திற்கு ஈடாகாது!
31. ஒரு பொருள் அதிகமாகக் கிடைப்பது, அது ஹலால் ஆவதற்கு ஆதாரமாகாது.
32. அல்லாஹ்வை அஞ்சி இறையச்சத்தைப் பேணுவது, அறிவு மற்றும் வெற்றியின் அடையாளமாகும்.
33. 'ஹலால்' உணவின் ஒரு கவளம், ஹராமான மொத்த உணவையும் விட சிறப்பானது.
34. ஹலாலையும் ஹராமையும் நிர்ணயம் செய்யும் அதிகாரம் அல்லாஹ்வின் கரங்களிலே மட்டும்தான் இருக்கிறது.
35. மறுமையில் யாரும் தண்டனையில் இருந்து தப்பிக்க இயலாது.
36. கிறித்தவர்கள் மறுமை நாளில் தம் தவறான கொள்கைக்காக வருந்துவர்.
37. மறுமையில் விசுவாசிகள் மட்டுமே ஜெயம் பெறுவார்கள்.

## தொடர்புகள்
## நுட்பமான விரிவுரைகள்

❖ ஸூரா அல்பகரா, ஆலுஇம்ரான், அந்நிஸா, ஆகியவைகளில் சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் விளக்கப்பட்டுள்ளன. அத்துடன் வேதக்காரர்களின் சந்தேகங்களுக்கு பதிலடிகள் தரப்பட்டுள்ளன; நபித்துவம் நிலைநாட்டப் படுகிறது; பனூ இஸ்ராயீல்களின் சிறப்புகள் பறிக்கப்பட்டதையும், இஸ்மாயீல் (அலை) வம்சத்தார் கண்ட மகத்துவத்தையும் இவ்வத்தியாயங்கள் பறைசாற்றுகின்றன. அல் மாயிதா அத்தியாயமோ ஒப்பந்தங்கள் மற்றும் வாக்குறுதிகளுக்காக அருளப்பட்டுள்ளது.

❖ பனூ இஸ்ராயீல்கள் தம் ஒப்பந்தங்களையும் வாக்குறுதிகளையும் நிறைவேற்றவில்லை! ஈமான் கொண்டவர்களே! لا ينال عهدي الظالمين "என்னுடைய வாக்குறுதி அநியாயக்காரர்களைச் சேராது.." என்கிற வட்டத்திற்குள் வந்து விடாமல், أوفوا بالعقود ஒப்பந்தங்களை நிறைவேற்றுங்கள் என்கிற அணியில் இணைந்திடுங்கள்!

❖ ஸூரா அந்நிஸாவிலும் அல்மாயிதாவிலும், யூதர்கள் மற்றும் கிறித்தவர்களின் வினாக்களுக்கு, உரிய விடைதரப்படுகிறது.

❖ ஸூரா அல்மாயிதாவில் கிறித்தவர்களைப் பற்றி அதிகம் பேசப்படுகிறது எனில் அந்நிஸாவிலோ யூதர்களைப் பற்றி மிகுதியாகக் குறிப்பிடப்படுகிறது.

**அழைப்புப் பணி, சீர்திருத்தப்பணி, மனப்பக்குவம், மற்றும் நினைவூட்டலுக்காக – சிந்திக்கவும் மனனமிடவும் உகந்த இறைவசனங்கள் மற்றும் நபிமொழி ..!**

## திருக்குர்ஆன்

حُرِّمَتْ عَلَيْكُمُ الْمَيْتَةُ وَالدَّمُ وَلَحْمُ الْخِنْزِيرِ وَمَا أُهِلَّ لِغَيْرِ اللَّهِ بِهِ وَالْمُنْخَنِقَةُ وَالْمَوْقُوذَةُ
وَالنَّطِيحَةُ وَمَا أَكَلَ السَّبُعُ إِلاَّ مَا ذَكَّيْتُمْ وَمَا ذُبِحَ عَلَى النُّصُبِ وَأَنْ وَالْمُتَرَدِّيَةُ
تَسْتَقْسِمُوا بِالأَزْلاَمِ ذَلِكُمْ فِسْقٌ الْيَوْمَ يَئِسَ الَّذِينَ كَفَرُوا مِنْ دِينِكُمْ فَلا تَخْشَوْهُمْ
وَاخْشَوْنِي الْيَوْمَ أَكْمَلْتُ لَكُمْ دِينَكُمْ وَأَتْمَمْتُ عَلَيْكُمْ نِعْمَتِي وَرَضِيتُ لَكُمُ الإِسْلامَ
دِيناً فَمَنِ اضْطُرَّ فِي مَخْمَصَةٍ غَيْرَ مُتَجَانِفٍ لِإِثْمٍ فَإِنَّ اللَّهَ غَفُورٌ رَحِيمٌ (٣)

5:3. (தானாகச்) செத்தது, இரத்தம், பன்றியின் இறைச்சி, அல்லாஹ் அல்லாததின் பெயர் அதன் மீது கூறப்பட்ட (அறுக்கப்பட்ட)தும், கழுத்து நெறித்துச் செத்ததும், அடிபட்டுச் செத்ததும், கீழே விழுந்து செத்ததும், கொம்பால் முட்டப் பட்டுச் செத்ததும், (கரடி, புலி போன்ற) விலங்குகள் கடித்(துச் செத்)தவையும் உங்கள் மீது ஹராமாக்கப் பட்டிருக்கின்றன் (அனுமதிக்கப்பட்டவற்றில்) எதை நீங்கள் (உயிரோடு பார்த்து, முறைப்படி) அறுத்தீர்களோ அதைத் தவிர (அதை உண்ணலாம். அன்றியும் பிற வணக்கம் செய்வதற்காகச்) சின்னங்கள் வைக்கப் பெற்ற இடங்களில் அறுக்கப்பட்டவையும் அம்புகள் மூலம் நீங்கள் குறி கேட்பதும் (உங்களுக்கு விலக்கப்பட்டுள்ளன) - இவையாவும் (பெரும்) பாவங்களாகும் இன்றைய தினம் கா.ஃ.பிர்கள் உங்களுடைய மார்க்கத்தை (அழித்து விடலாம் என்பதை)ப் பற்றிய நம்பிக்கையை இழந்து விட்டார்கள் எனவே நீங்கள் அவர்களுக்கு அஞ்சாதீர்கள் எனக்கே அஞ்சி நடப்பீர்களாக் இன்றைய தினம் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை பரிபூர்ணமாக்கி விட்டேன் மேலும் நான் உங்கள் மீது என் அருட்கொடையைப் பூர்த்தியாக்கி விட்டேன் இன்னும் உங்களுக்காக நான் இஸ்லாம் மார்க்கத்தையே (இசைவானதாகத்) தேர்ந்தெடுத்துள்ளேன் ஆனால் உங்களில் எவரேனும் பாவம் செய்யும் நாட்டமின்றி, பசிக் கொடுமையினால்

நிர்ப்பந்திக்கப்பட்டு (மேலே கூறப்பட்ட விலக்கப்பட்டவற்றைப் புசித்து) விட்டால் (அது குற்றமாகாது). ஏனெனில் நிச்சயமாக அல்லாஹ் மிகவும் மன்னிப்பவனாகவும், கருணை மிக்கோனாகவும் இருக்கின்றான்.

مِنْ أَجْلِ ذَلِكَ كَتَبْنَا عَلَى بَنِي إِسْرَائِيلَ أَنَّهُ مَنْ قَتَلَ نَفْساً بِغَيْرِ نَفْسٍ أَوْ فَسَادٍ فِي الْأَرْضِ فَكَأَنَّمَا قَتَلَ النَّاسَ جَمِيعاً وَمَنْ أَحْيَاهَا فَكَأَنَّمَا أَحْيَا النَّاسَ جَمِيعاً وَلَقَدْ جَاءَتْهُمْ رُسُلُنَا بِالْبَيِّنَاتِ ثُمَّ إِنَّ كَثِيراً مِنْهُمْ بَعْدَ ذَلِكَ فِي الْأَرْضِ لَمُسْرِفُونَ (٣٢)

5:32. இதன் காரணமாகவே, “நிச்சயமாக எவன் ஒருவன் கொலைக்குப் பதிலாகவோ அல்லது பூமியில் ஏற்படும் குழப்பத்தை(த் தடுப்பதற்காகவோ) அன்றி, மற்றொருவரைக் கொலை செய்கிறானோ அவன் மனிதர்கள் யாவரையுமே கொலை செய்தவன் போலாவான் மேலும், எவரொருவர் ஓராத்மாவை வாழ வைக்கிறாரோ அவர் மக்கள் யாவரையும் வாழ வைப்பவரைப் போலாவார்” என்று இஸ்ராயீலின் சந்ததியினருக்கு விதித்தோம். மேலும், நிச்சயமாக நம் தூதர்கள் அவர்களிடம் தெளிவான அத்தாட்சிகளைக் கொண்டு வந்தார்கள். இதன் பின்னரும் அவர்களில் பெரும்பாலோர் பூமியில் வரம்பு கடந்தவர்களாகவே இருக்கின்றனர்.

## அல்ஹதீஸ்

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘‘என் உயிரைத் தன் கையில் வைத்திருப்பவன் மீது சத்தியமாக! நன்மையை ஏவி, தீமையைத் தடுத்து வாருங்கள்! இல்லையெனில் அல்லாஹ் தன் புறத்தில் இருந்து உங்கள் மீது தண்டனையை அனுப்பிவிடக் கூடும்; பிறகு நீங்கள் துஆ – பிரார்த்தனை புரிவீர்கள்; அதுவும் ஏற்கப்பட மாட்டாது’’. (அறிவிப்பாளர்: ஹுதைபா பின் அல்யமான் (ரலி) – நூல்: திர்மிதீ , எண்: 2169)

‘‘நபி (ஸல்) அவர்கள் விண்ணை நோக்கினார்கள்..! ‘யூதர்களை அல்லாஹ் நாசமாக்குவானாக! அவர்களுக்கு அவன் கொழுப்பைத் தடை செய்து (ஹராம்) ஆக்கினான். அவர்களோ.., அதை விற்றார்கள்; அக் கிரயத்தை உண்டார்கள். நிச்சயமாக அல்லாஹ் ஒன்றைத் தடை செய்கிறபோது, அதன் கிரயத்தையும் ஹராமாக்கி விடுகிறான்’’ என நபி (ஸல்) கூறினார்கள். ( அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் (ரலி) - ஸஹீஹ் இப்னு ஹிப்பான் , எண்: 4938)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘‘யார் ‘திம்மீ ’யை - உடன் படிக்கையுள்ள காபிரைக் கொலை செய்வாரோ அவர், சுவனத்தின் வாசனையையும் நுகரமாட்டார். இத்தனைக்கும் அதன் வாசனையோ நாற்பது வருட தொலை தூரத்தில் இருந்தும் எட்டிவிடும் ’’ (அறிவிப்பாளர்: அப்துல்லா பின் அம்ரு (ரலி) – நூல் புகாரீ, எண்- 3166)

# سُوْرَةُالاَنْعَامِ

## ஸூரதுல் அன்ஆம்
## கால்நடைகள்

6

இது ‘மக்கீ’
ஸூரா ஆகும்.

# சில நோக்கங்கள்
## *Few Objectives*

- ❖ இவ்வத்தியாயத்தின் நோக்கம், கொள்கை மற்றும் அன்றாட செயல்பாடுகளில் (பேணப்படும்) தூய ஏகத்துவம் ஆகம். 1
- ❖ சமுதாயம் வீழ்ச்சியில் இருந்து விடுபட்டு, வளர்ச்சி பெற்றிட, சுயசுத்திகரிப்பு மற்றும் வார்த்தெடுத்தலில் கவனம் காட்டுவது அவசியமாகும். 2
- ❖ உறுதியான ஆதாரங்களின் ஒளியில் சத்தியம் நிலைநாட்டப்படுகிறது; அசத்தியம் நொறுக்கப்படுகிறது. 3
- ❖ தவ்ஹீத்(ஏகத்துவம்), ரிஸாலத்(தூதுத்துவம்), ஆகிரத் (மறுமை) முதலியவை இந்த ஸூராவில் இடம் பெற்றுள்ளன. 4
- ❖ தவ்ஹீத் மற்றும் ரிஸாலத் குறித்த விமர்சனங்களுக்கு இவ்வத்தியாயத்தில் பதில்கள் தரப்பட்டுள்ளன. 5
- ❖ இவ்வத்தியாயத்தில் (ஆதாரத்தை நிறுவுதல், விமர்சனங்களுக்குப் பதில் தருதல், சந்தேகங்களைப் போக்குதல் என) உரையாற்றும் நடை கையாளப்பட்டுள்ளது.
- ❖ (ஆசையூட்டல், வெறுப்பூட்டல்) என உணர்வூட்டும் பாணியைக் கையிலெடுத்திடுக!
- ❖ எச்சரிக்கை செய்வதோடு ஹிஜ்ரத் (இலட்சியத்திற்காக இடம் பெயர்தல்), போராட்டம், இறை வேதனை இறங்குதல் என்கிற நிலைகள் (குறிப்பிடப்பட்டுள்ளன).
- ❖ சிலைவணக்கம், மனோஇச்சை, அறிவின் ஆராதனை, முன்னோரைத் துதிபாடுதல், அல்லது அலட்சியத்திற்குப் பலியாகுதல் என படைத்தவனை விட்டு விலகிச் செல்கின்ற.., உலக மக்கள் அனைவரிடமும், பொதுவாகவும் - குரைஷிகளிடம், குறிப்பாகவும் பேசப்படுகிறது.
- ❖ அரபிகளின் அறியாமைக்காலம் மற்றும் மூட நம்பிக்கைகள், அன்றாட நடைமுறைகள், சமூகப் பழக்கவழக்கங்கள், சிந்தனைகள், ஆகியவைகளை அவர்களின் வாழ்க்கைத் திட்டத்தில் காணவேண்டுமெனில் 'ஸூரதுல் அன்ஆமைப்' படித்திட வேண்டும்.

---

1. விபரங்களுக்கு: கிதாபுத் தவ்ஹீத் அல்லதீ ஹுவ ஹக்குல்லாஹி அலல் அபீத் - முஹம்மது பின் அப்துல் வஹ்ஹாப் மற்றும் அஷ்ஷைக் ஸாலிஹ் அல்பவ்ஸான் அவர்களின் கிதாபுத் தவ்ஹீத்.
2. அஷ்ஷைக் அல்பானீ அவர்களின் 'அத்தர்பியா வத் தஸ்பியஹ்' வில் சமுதாய எழுச்சிக்கு வழிவகுக்கின்ற குர்ஆன்-ஹதீஸ் அடிப்படையிலான இரு விதிகள் தெளிவாக்கப்பட்டுள்ளது.
3. விபரங்களுக்கு: 'ஷரஹ் உஸூலுல் ஈமான்' - முஹம்மது பின் ஸாலிஹ் அல் உஸைமீன்
4. விபரங்களுக்கு: 'அல் இர்ஷாத் இலா ஸஹீஹில் இ∴திகாத் வர்ரத்து அலா ஷிர்கில் இ∴திகாதி வல் இனாத் - ஸாலிஹ் அல்பவ்ஸான் அல் பவ்ஸான்.
5. விபரங்களுக்கு: கஷ்புஷ் ஷுப்ஹாத் பித் தவ்ஹீத் - முஹம்மது பின் அப்துல் வஹ்ஹாப்.

# சில தலைப்புகள்
## *Few Topics*

1. அல்லாஹ்வின் வல்லமை மற்றும் அவனுடைய தனித்துவத்திற்கான சில ஆதாரங்கள். (1-3)
2. முஷ்ரிக்குகள் அசத்தியத்திற்காகப் போராடுவதும் அதன் முடிவும். (4-11)
3. ஏகத்துவம் மற்றும் மரணத்திற்குப் பிந்தைய வாழ்க்கை பற்றிய சில ஆதாரங்கள். (12-18)
4. தன் தூதருடைய நபித்துவத்திற்காக அல்லாஹ்வின் சாட்சி மற்றும் அல்லாஹ்வின் தனித்துவத்திற்காக அவன் தூதரின் சாட்சி. (19)
5. வேதமளிக்கப் பட்டவர்கள், முஹம்மது (ஸல்) அவர்களை அறிந்திடுவதும், தமது நபியைப் பொய்ப்பித்தலும். (20-26)
6. மறுமையைப் பற்றிய முஷ்ரிக்குகளின் கருத்தும், அவர்களின் கேள்விகளுக்கான பதில்களும். (27-32)
7. ரஸூல் (ஸல்) அவர்களுக்கான ஆறுதல் மற்றும் முஷ்ரிக்கானவர்கள் காணப்போகும் இழி நிலை குறித்த விவரம். (33-36)
8. அல்லாஹு தஆலா அனைத்தையும் சூழ்ந்தறியும் ஞானம் மிக்கவன்; முழுமையான ஆற்றல் கொண்டவன் என்கிற விபரம். (37-39)
9. வறுமை மற்றும் செழிப்பு பற்றிய விபரங்கள்! இவ்விரு நிலைகளிலும் முஷ்ரிக் - இணைவைப்பாளர்களிடம் ஏற்படும் மாற்றங்கள்!! (40-44)
10. அல்லாஹு தஆலாவின் வல்லமைக்கான சில ஆதாரங்கள், (45-47)
11. இறைத் தூதர்கள் கண்ட இயக்கமும், மக்களில், விசுவாசிகள் மற்றும் அவிசுவாசிகள் என்கிற ரீதியில் பங்கீடும். (48-49)
12. இரஸூல் (ஸல்) அவர்கள் மனிதருள் ஒருவரே! அவர்கள் கண்ட இயக்கம்..! – விபரம்.(50-58)
13. பொதுவான மற்றும் குறிப்பான விஷயங்களில் பரிபூரணமான ஞானம்; அடியார்களின் காரியங்களில் முழுமையான ஆதிக்கம். (59-67)
14. திருக்குர்ஆன் மற்றும் நபி(ஸல்) அவர்கள், கேலி-கிண்டல் செய்யப்படுகின்ற சபைகளில், அமர்ந்திருக்கத் தடை.(68-70)
15. மறுமை நாள் குறித்து இணைவைப்பாளர்கள் எச்சரிக்கப்படுவதும், அவர்களுக்கான மறுப்பும். (71-73)

16. தன் தந்தை மற்றும் சமுதாய மக்களோடு இபுறாஹீம் (அலை) அவர்களின் உரையாடல்; ஏகத்துவத்திற்கான ஆதாரத்தை நிலை நாட்டுதல். (74-83)
17. நபிமார்களுக்கு அல்லாஹ்வின் வழிகாட்டல்கள், அவர்களைத் தேர்ந்தெடுத்தல், மற்றும் அவர்கள் பின்பற்றப்படுவதற்கான கட்டளை! (84-90)
18. ஒரு மனிதருக்கு விண்ணில் இருந்து திருக்குர்ஆன் அருளப்பட்டதை ஏற்காத யூதர்களுக்கு, மறுப்பு..!
19. மறுமை வாழ்வை பொய்ப்பித்த மக்கள் பெற்றிடும் தண்டனை விபரம்.
20. வெளியாகும் இடங்கள்..!
21. அல்லாஹ்விற்கு மனைவியும் பிள்ளைகளும் உள்ளனர் - என்ற இணைவைப்பாளர்களின் அபாண்டத்திற்கு மறுப்பு!
22. அறியாமையால் இணைவைப்பவர்கள் (முஷ்ரிகுகள்) அல்லாஹ்வைத் திட்டுவதற்கு இடம்தரக் கூடாது என்பதற்காக அவர்களின் தெய்வங்களைத் திட்டக் கூடாது.
23. முஷ்ரிகுகள் அற்புதங்களை எதிர்பார்த்ததற்காக எச்சரிக்கை விடுக்கப்படல்; அல்லாஹ்வின் தண்டனை எடுத்துரைக்கப்படுதல்..!
24. நபி(ஸல்) அவர்கள் குறித்து அல்லாஹ்வின் சாட்சி; அல்லாஹ்விடமிருந்து வந்தவை அனைத்தும் உண்மையே!
25. காபிர் (நிராகரிப்பாளர்) களின் தன்மைகள்; அவர்களுடைய உள்ளத்தின் விபரமனைத்தையும் அல்லாஹ் அறிகிறான்.
26. பிராணிகளை அறுப்பதில், ஹலால் மற்றும் ஹராம் விபரம்.
27. விசுவாசிகள் மற்றும் காபிர்களுக்கான உதாரணங்கள் காட்டப்பட்டுள்ளன.
28. குற்றவாளிகளின் சூழ்ச்சிகள் மற்றும் தண்டனை விபரம்.
29. நேர்வழி பெற்றவர்கள் மற்றும் வழிகெட்டவர்களுடைய உதாரணங்கள்.
30. நேர்வழி பெற்றவர்கள் மற்றும் வழிகெட்டவர்களுடைய தண்டனைகள்.
31. மறுமை நாளின் சில காட்சிகள்.
32. அவிசுவாசிகள் எச்சரிக்கப் படுகிறார்கள்..!
33. இணைவைப்பாளர்களின் கற்பனையான காரியங்களும், அதற்கான பதிலடிகளும்.
34. அல்லாஹ்வின் ஆற்றலும், அவனது அருட்கொடைகளின் விபரங்களும்.
35. இணைவைப்பாளர்களின் பலமில்லாத (அர்த்தமற்ற) சந்தேகம் - விபரம்.

36. ஹராமானவை – குறிப்பு
37. அல்லாஹ் வேதத்தில் அருளிய அனைத்திலும் நேர்வழி உண்டு; அவைகளைப் பின்பற்றுவது கட்டாயமாகும்; மாறு செய்வோருக்கு எச்சரிக்கை!
38. மறுமை, மரணம் மற்றும் அவைகளின் அடையாளங்கள்.
39. ஹிதாயஹ் - நேர்வழி அல்லாஹ்வின் ஓர் அருட்கொடையாகும்.

## சில பாடங்கள்
## *Few lessons*

01. அல்லாஹ்வையே வணங்க வேண்டும்; முழுமையான தன்மைகளின் உரிமையாளன் அவனே!
02. இந்த படைப்புகளைத் தோற்றுவித்திருப்பதும், அவைகளின் ஒழுங்கமைப்பும் படைப்பாளனின் முழுமையான ஆற்றலுக்கு ஆதாரமாகும்.
03. அல்லாஹு தஆலாவின் தனித்துவத்தை அறிந்த பின்பும், காபிர்கள் இறைமறுப்புக் குடையின் கீழிருப்பது அவர்களின் பிடிவாதமாகும்.
04. பயன்தருதல், இடர்வருதல் யாவும், தனித்த அல்லாஹ் ஒருவனிடமே உள்ளது.
05. அல்லாஹு தஆலாவின் அத்தாட்சிகளில். அறிவுடையோருக்குப் பாடமும் படிப்பினையும் இருக்கிறது.
06. பூமியைச் சுற்றிப்பார்ப்பது, அல்லாஹவின் அத்தாட்சிகளில் சிந்தித்து சீர்தூக்கிப் பார்ப்பதேயாம்.
07. இணைவைப்பாளர்கள் எப்பொழுதுமே அல்லாஹ் மற்றும் அவன் தூதர் (ஸல்) அவர்களின் அத்தாட்சிகளை ஏளனம் செய்கிறார்கள்.
08. முஷ்ரிக்குகளின் ஒரு பண்பு, நபிமார்கள் மீது இட்டுக்கட்டி பொய்யுரைப்பதாகும்.
09. நரகிற்கு எவரும் சென்றுவிடக் கூடாது என்பது, நபி (ஸல்) அவர்களுக்கிருந்த கடுமையான பேராசையாகும்.
10. முன்சென்ற நபிமார்களின் வாழ்வில் நிகழ்ந்தவை யாவும், நபி(ஸல்) அவர்களுக்கு ஆறுதல் அளிப்பவை ஆகும்.
11. மு.ஃ.ஜிஸாத் - அற்புதங்கள் அல்லாஹ்வின் விருப்பத்தின்படி நடைபெறுகின்றன.
12. வேதம் கொடுக்கப்பட்டவர்களும் அல்லாஹ்வின் அத்தாட்சிகளைப் பார்த்த பின்பும் மறுத்துக் கொண்டிருந்தார்கள்.

13. இறைநிராகரிப்பாளர்கள் - காபிர்கள் மற்றும் இணைவைப்பாளர்கள் - முஷ்ரிக்குகள், இம்மை மறுமை இரண்டிலும், இழப்பைச் சந்திக்கப் போகிறவர்கள் ஆவர்.
14. முஷ்ரிக்குகள் தங்களின் குரோதம் மற்றும் பொறாமையால் சத்தியத்தை ஏற்காதிருந்தார்கள்.
15. நன்மை மற்றும் தீமைகளில் அதிகாரமுடையவன் அல்லாஹ் மட்டுமே..!
16. பொறுமையும், உறுதிகுலையாத தன்மையும் அழைப்புப் பணியில், ஓர் இறை அழைப்பாளனுடைய ஆயுதங்களாகும்.
17. நபிமார்கள் மற்றும் இரஸூல்மார்களின் வாழ்க்கைச்-சரித்திரங்களில் பொறுமை மற்றும் நிதானத்திற்குரிய மிக உன்னதமான முன்மாதிரிகள் உள்ளன.
18. சத்தியத்தின் எதிரிகள் எக்காலத்திலும் இருக்கவே செய்கிறார்கள்.
19. த.்.வஹ் - அழைப்புப் பணியின் பாதையில் கஷ்டங்களும், சோதனைகளும் இடம் பெறுகின்றன.
20. உயிரோட்டமான இதயமும் பழுதற்ற இயல்பும் கொண்டோரே இஸ்லாத்தை ஏற்கிறார்கள்.
21. இறை விசுவாசத்தால் இதயம் வாழ்வு பெறுகிறது; பார்வை தீர்க்கமடைகிறது..!
22. படைப்புகளின் பெரும் அத்தாட்சிகளோடு, காபிர் - இறை மறுப்பாளர்கள் மேலதிகமாக அத்தாட்சிகளை வேண்டுகிறார்கள்!
23. சத்தியத்தைத் தேடுவோருக்கு நிச்சயமாகப் பலன் கிடைக்கும்.
24. ‘அல்லாஹ்தான் உண்மையான இறைவன்’ - என்பதற்குப் படைக்கப்பட்டுள்ளவைகளின் ஒவ்வொரு அணுவும் சாட்சிகளாய்த் திகழுகின்றன.
25. ‘விசுவாசத்திற்குப் பிறகு சோதனை வரும்’ என்பதே இறைவன் வகுத்த விதியாகும்.
26. காபிர்களுக்கும் முஷ்ரிக்குகளுக்கும் தரப்படுகின்ற அவகாசமே, அவர்கள் பெறுகின்ற சோதனையாகும்.
27. அடியார்கள் மீது ஆதாரத்தை நிலைநாட்டவே, அல்லாஹ் தன் தூதர்களை அனுப்பியுள்ளான்.
28. இறை வேதனை குறித்து எச்சரிக்கை தருவதும் இறைவனின் திருவருளைப் பற்றி நற்செய்தி சொல்வதும்தான் நபிமார்களின் பணியாகும்.
29. ஓர் இறைத் தூதர் சுயமாக எதையும் கூறமாட்டார்; இறை செய்தி (வஹீ)யையே அவர் பின்பற்றி வருவார்.
30. பலமான குற்றவாளிகள் பலஹீனமான முஸ்லிம்களை

மிகைப்பதும் ஒரு சோதனையே ஆகும்.

31. இஸ்லாமிய மார்க்கம், கனவான்கள் - ஏழைகள் - அரசர்கள் - ஆண்டிகள் என அனைவருக்கும் பொதுவானதாகும்.
32. முஷ்ரிக்குகளின் இணை வைப்போடு எந்தத் தொடர்பும் இல்லை என முஃமின்கள் அறிவித்திடுக!
33. மறைவானவைகளை அறிகிறவன் அல்லாஹ் மட்டுமே!
34. தூக்கம் சிறிய மரணம் ஆகும்.
35. ஆற்றல்கள் அனைத்தையும் கொண்டவன் அல்லாஹ்..! எனவே அவனிடமே உதவியைக் கேட்டுப் பெறுக!
36. அல்லாஹ் மனிதர்கள் அனைவரையும் இயற்கையின் மீது படைத்திருக்கிறான்.
37. மார்க்க அழைப்பின் அடிப்படை சமூக துவேஷமல்ல; மனித நேயத்தின் நலம் நாடுவதாகும்.
38. மக்கத்து முஷ்ரிகீன்களும் கஷ்ட காலங்களில், ஓரிறைவனையே மனத்தூய்மையுடன் அழைத்தார்கள்.
39. அருட்கொடைகளைத் தருகிறவன் அல்லாஹ்; அதைப் பறிக்கிறவனும் அல்லாஹ் மட்டுமே!
40. அல்லாஹ்வின் உபகாரங்களை எப்பொழுதும் நினைவில் கொள்க!
41. ஈருலகத்திலும் இஸ்லாம்தான் வெற்றிக்கான வழியாகும்.
42. மார்க்கத்தை எடுத்துரைப்பதற்காக அன்றி, பாவிகளோடு அமர்தல் தடை செய்யப்பட்டதாகும்.
43. மத நல்லிணக்கத்திற்காக காபிர்களின் சபைகளுக்குச் செல்வது, (மார்க்கத்தை) விட்டுக் கொடுப்பதாகும். மார்க்க விஷயங்களில் 'என் வழி எனக்கு – உம் வழி உங்களுக்கு' எனும் நிலைப்பாடு; உலக காரியங்களில், இஸ்லாம் மற்றும் உண்மையை எடுத்துரைக்கும் நோக்கில் இனிய அணுகுமுறை..!
44. மலக்குகள் அல்லாஹ்வால் படைக்கப்பட்டவர்கள்; புதல்வியர் அல்ல..!
45. அல்லாஹ் காபிர்களுக்குக் குறிப்பிட்ட ஒரு காலம்வரை அவகாசம் தருகிறான்..!
46. ஹிதாயத் - நேர்வழியின் பாதை ஒன்று மட்டுமே! அது இஸ்லாத்தின் பாதையே!!
47. நல்ல சகவாசம், தீமைகளில் இருந்து பாதுகாக்கிறது.
48. அல்லாஹ்வின் உதவி இல்லாமல், எவரும் நேர்வழியில் செல்ல இயலாது.
49. படைத்தவனுக்கும் அவனது அடியாருக்கும் இடையில் தொழுகை, தொடர்பை ஏற்படுத்தித் தருகிறது.

50. அல்லாஹ்வின் சட்டங்களுக்கு முன்னால், மனிதன் கட்டுப்பட்டுக் கீழ்படிந்து நடந்திட வேண்டும்..!
51. ஒரு இறைஅழைப்பாளர் அழைக்கப்படுவோரிடம் அந்நியோன்யமாக நடந்திடுக!
52. ஒரு இறைஅழைப்பாளர் அழைக்கப்படுவோரின் நலம் நாடுகிறவராகத் திகழ்கிறார்..!
53. ஒரு இறைவிசுவாசி, அழைக்கப்படுவோருக்காக எப்போதும் தவிப்புடன் இருந்திடுக!
54. ஒரு இறைஅழைப்பாளர், தாம் முன்வைக்கின்ற விஷயத்தை அழைக்கப்படுவோரின் நிலையறிந்து கூறுக..!
55. முஹம்மது (ஸல்) அவர்கள், புதிதாக எந்த மார்க்கத்தையும் கொண்டுவரவில்லை; அதுமட்டுமின்றி அனைத்து நபிமார்களின் மார்க்கமும் ஒன்றாகவே இருந்தது.
56. ஷிர்க் - இணைவைப்பு நன்மைகளைப் பாழ்படுத்திவிடுகின்ற செயலாகும்.
57. ஓர் இறைஅழைப்பாளர், அல்லாஹ்வின் உதவிக்காக எப்போதும் பிரார்த்தித்தவாறே இருந்திடுக!
58. முஹம்மத் (ஸல்) அவர்கள், நபிமார்கள் யாவரையும் பின்பற்றி அவர்களின் அடியொற்றி நடக்கிறார்கள்..!
59. மிகப் பெரிய அநியாயம் அல்லாஹ்வின் மீது பொய்யுரைப்பதாகும்.
60. காதமுல் அன்பியா - இறுதி இறைத்தூதர் (முஹம்மத் (ஸல்) அவர்களுக்குப்) பின் எவரும் தன்னை நபி எனச் சொல்ல இயலாது.
61. காபிர்களும் முஷ்ரிக்குகளும் மரணிக்கும் வேளைகளில் கடுமையாக நடத்தப்பட்டு வேதனை தரப்படுவர்.
62. மரணத்திற்குப் பிந்தைய வாழ்வு பற்றிய கொள்கையை அறிய, உணர்வுப் பூர்வமான ஆதாரங்களே போதுமானவை ஆகும்.
63. அல்லாஹ் நம்மைப் படைத்திருக்கின்ற போது, மீண்டும் நம்மைப் படைப்பது எளிதானதே!
64. இந்தப் படைப்புகளில் அல்லாஹ்வின் வல்லமைக்கான அத்தாட்சிகள் ஏராளமாக இருக்கின்றன.
65. அல்லாஹு தஆலா நட்சத்திரங்களை, வழிகளைத்தெரிந்து கொள்ளப் படைத்திருக்கிறான்.
66. கிரகங்களைப் பற்றிய கல்வி மக்களின் ‘தலை விதி’ யை அறிவிப்பதற்காக அல்ல; அல்லாஹ்வின் வல்லமையை அறிந்திட ஒரு சான்று ஆகும்.
67. படைப்புகள் படைக்கப்பட்டுள்ள விதத்தை, ஆழ்ந்து சிந்திப்பது, மு..மினின் தன்மையாகும்.

68. தவ்ஹீத் - ஏகத்துவ ஆதாரங்களை எடுத்துரைக்கும் போது, முன்னிருப்போரைக் கவனித்திடுக!
69. அல்லாஹ் படைப்பாளன்; பிறர் யாவரும் படைக்கப்பட்டவர்களே!
70. அல்லாஹ்வின் திருமேனியைக் குறித்து, முழுமையாக அறிவதென்பது முடியாதது; சாத்தியமற்றது.
71. திருக்குர்ஆன் எல்லாக் காலத்திற்கும் ஏற்றது; மதிப்புமிக்கது.
72. மார்க்க விவகாரங்களில் எந்த நிர்ப்பந்தமும் இல்லை! அனைவருக்கும் சுய அதிகாரம் உண்டு..!
73. தாயீ – அழைப்பாளரின் பணி எடுத்துரைப்பதே! முடிவு அல்லாஹ்வின் வசமே!!
74. இணைவைப்போருடைய தெய்வங்களைத் திட்டக்கூடாது; அவ்வாறு திட்டுகின்ற பொழுது அவர்கள் அறியாமையால் அல்லாஹ்வைத் திட்டுவார்கள்.
75. த∴வஹ் - அழைப்புப் பணியில் ஈடுபடுத்தப்படுகின்ற உபகரணங்களும் 'ஹலாலாக' இருக்க வேண்டும்!
76. இந்த படைப்புகளின் காரியங்கள் யாவும் அல்லாஹ்வின் நாட்டப்படியே நடைபெறுகின்றன.
77. சத்தியப் பாதையில் சோதனைகள் வருவது அல்லாஹ் வகுத்தவிதியாகும்.
78. சத்தியத்திற்கும் அசத்தியத்திற்கும் இடையில் எப்போதும் போராட்டம் இருந்திருக்கிறது.
79. ஒவ்வொரு நபிக்கும் சில நண்பர்களும் உண்டு; சில எதிரிகளும் உண்டு!
80. குழப்பமான காலங்களில், ஈமான் - இறைவிசுவாசமே வெற்றிக்குரிய வழியாகும்.
81. திருக்குர்ஆன் முழுமையான வாழ்க்கைத் திட்டமாகும்.
82. அசத்தியவாதிகளின் மிகுதியும், சத்தியவாதிகளின் குறைவும் மக்களை ஏமாற்றிவிடவேண்டாம்!
83. ஷரீஅத் சட்டங்களைச் செயல்படுத்துவது, ஈமானின் தேட்டமாகும்..!
84. திருக்குர்ஆனையும் ஹதீஸையும் தாங்கிப் பிடிப்பதே குழப்பங்களில் இருந்து மீண்டுவருவதற்கான வழியாகும்!
85. ஓர் அடியான் இஸ்லாமிய மார்க்கத்தின்படி செயல்பட்டுக் கொண்டிருப்பதே.., அல்லாஹ்வின் மீதான அவனுடைய பாசத்திற்கு அத்தாட்சியாகும்.
86. காபிர்கள் மற்றும் முஷ்ரிக்குகளிடம் இருந்து எப்போதும், சந்தேகங்கள் வந்தவண்ணம் இருக்கும்; திருக்குர்ஆன் மற்றும் ஸுன்னா ஒளியில் அவைகளை தீர்த்து வைப்பது, ஒரு' தாயீ ' - இறை அழைப்பாளரின் கடமையாகும்.

87. அகந்தையும், ஆணவமும் சத்தியத்தை ஏற்பதற்கு தடைக்கற்களாகும்!
88. நுபுவ்வஹ் - நபித்துவம் அல்லாஹ்வின் அருளாகும்.. அதை அவன் மட்டுமே அருள்வான்!
89. அல்லாஹ் எவருக்கு நேர்வழியைத் தரவிரும்புகின்றானோ, சத்தியத்தை ஏற்றுக்கொள்ள அவருக்கு வழிகாட்டுகிறான்.
90. மக்கள் நேர்வழியைப் பெறுவதும், தவறான வழியில் செல்வதும் அல்லாஹு தஆலாவின் கைவசமே இருக்கிறது!
91. மறுமை நாளில் மக்கள் தத்தமது செயல்களை ஒத்துக் கொள்வார்கள்!
92. சத்தியத்தைத் தெரிந்தபின்பு, அதை மறுப்பது பயங்கரமான குற்றமாகும்.
93. அல்லாஹ்வின் வாக்குறுதி உண்மையானதாகும்; என்றேனும் ஒரு நாள் அது நடந்தே தீரும்..!
94. அநியாயம் ஹராமானதாகும்; அல்லாஹ் அதனைத் தன்மீதும் தடை செய்துவிட்டான்.
95. அல்லாஹ் தேவையற்றவன்; அவனது படைப்புகள் யாவும் அவனிடம் தேவையாகின்றன.
96. ஹராமையும் ஹலாலையும் தீர்மானிக்கும் உரிமை அல்லாஹ்விற்கே உரியது.
97. பெண்ணுரிமைகளை உண்மையாகப் பேணுகின்ற மார்க்கம் இஸ்லாம் மட்டுமே!
98. ஹலாலை ஹராமாகவும் ஹராமை ஹலாலாகவும் ஆக்குவது இணைவைப்பாளர்களின் கடுமையான குற்றமாகும்.
99. அருட்கொடையைத் தருகிறவன் அல்லாஹ் ஒருவனே! எனவே அவனுக்கே நன்றி பாராட்டுக!!
100. 'நிஸாபை' (உரிய அளவை) அடைகின்ற பொழுது, பழங்களிலும் தானியங்களிலும் 'ஜகாத்' கடமையாகும்.
101. உண்பதற்கு அல்லாஹ் அனுமதித்தவை யாவும் தூய்மையானவையே! எனவே அவைகளைச் சாப்பிடுக!!
102. உண்பதற்கு அல்லாஹ்வால் தடுக்கப்பட்டவை அனைத்தும் அசுத்தமானவையே! எனவே அவைகளை உண்ணவேண்டாம்!!
103. ஹராமை ஹலாலாகவும், ஹலாலை ஹராமாகவும் மாற்றுதல் அல்லாஹ்வின் மீதான இட்டுக்கட்டாகும்.
104. ஆதாரத்தின் அடிப்படையிலான அறிவுசார் விவாதங்கள் இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளன..!
105. இணைவைப்பது அல்லாஹ்வின் உரிமையை மறுப்பதாகும்.
106. அல்லாஹ்வின் வாக்குகளும், சட்டங்களும் அறிவு மற்றும் இலட்சியத்தின் மீது கட்டமைக்கப்பட்டதாகும்.

107. இஸ்லாத்தின் வழி நேர்வழியாகும்! மக்கள் அதன் வழி செல்க!!
108. பேற்றோருக்கு கட்டுப்படாமை.., ஹராமானதாகும்.
109. பசி பட்டினிக்காக குழந்தைகளைக் கொலை செய்வது, ஹராமானதாகும்.
110. கெட்டவைகளில் இருந்து தூரமாக்குவதே, இஸ்லாத்தின் தேட்டமாகும்.
111. அநாதைகளின் செல்வத்தைப் பாதுகாப்பதும் அதனைப் பிராயமடைந்தபின் ஒப்படைப்பதும் கடமை..!
112. அளவு மற்றும் எடை போடுவதில் குறைவு செய்தல் ஹராம்.
113. சக்தியைத் தாண்டி எவருக்கும் அல்லாஹ் கஷ்டத்தைத் தருவதில்லை.
114. உண்மையை உரைப்பது கட்டாயம்; உறவினருக்கே பாதகமாக இருப்பினும் சரியே!
115. முந்தைய வேதங்கள் காலத்தின் தேவையாக இருந்தன; திருக்குர்ஆனோ மறுமை நாள் வரை நேர்வழியின் ஊற்றுக்கண்ணாக இருக்கிறது.
116. அரபி மொழி திருக்குர்ஆனின் மொழியாகும்! அதைக் கற்பது, கட்டாயமானதாகும்..!
117. தீர்ப்பு நாளன்று அல்லாஹ் கணக்குக் கேட்பான்; அதன் முறையை அவனே அறிவான்!!
118. திருக்குர்ஆன் ஒன்றுபட்டு ஓரணியில் நின்றிட அழைக்கிறது; கருத்து வேறுபாடுகளையும் பிரிவினையையும் தடுக்கிறது.
119. அன்றாட செயல்பாடுகளிலும், வழிபாடுகளிலும், இக்லாஸ் - இறைதிருப்தியை நாடுதல், அல்லாஹ்வின் அங்கீகாரத்தைப் பெற்றுத் தருகிறது.
120. மனிதர்களும் ஜின்களும் படைக்கப்பட்டதன் நோக்கம், அகிலங்களின் இறைவன் தூயமுறையில் வணங்கப்படுவதற்கே!
121. மக்களுடைய வாழ்க்கைத் தரத்திலுள்ள பொருளாதார வேறுபாடுகள், அல்லாஹ்வுடைய (ஞானத்தின்) யுக்தியின் தேட்டமாகும்.
122. அல்லாஹ் பரிபூரணமான தன்மைகளின் சொந்தக்காரன் ஆவான். எனவே அவனையே வணங்குக..!

# தொடர்புகள் நுட்பமான விரிவுரைகள்

❖ ஆரம்ப நான்கு அத்தியாயங்களில், வேதமளிக்கப் பட்டவர்களுக்கு இஸ்லாமிய அழைப்பு விடுக்கப்படுகிறது. 'ஸூரதுல் அன்ஆமில் " குறைஷியரை எச்சரித்திடும் விதத்திலும் ஆதாரத்தை நிலை நாட்டும் வகையிலும் இஸ்லாமிய அழைப்பு முன்வைக்கப்படுகிறது.

❖ குறைஷிக் குலத்துக் காபிர்களுக்கு, இப்றாஹீம் (அலை) அவர்களின் வம்சாவழியில், தம் முன்னோர்கள், வந்தது குறித்து, ஒரு தனிப் பெருமை இருந்தது. எனவே ஸூரா அல் அன்ஆமில், "இப்றாஹீம்(அலை) அவர்களின் மார்க்கம் இஸ்லாம்தானே! நீங்கள் செய்பவைகளோ, நீங்களே உண்டாக்கியுள்ள சட்ட திட்டங்களே!! எனவே இவைகளை விட்டுவிலகி இஸ்லாத்தின் வழி வருகவே!!!" - என எடுத்துரைக்கப்படுகிறது.

❖ காபிர்களின் ஆட்சேபனைகளுக்குப் பல்வேறு பதிலடிகள் தரப்பட்டு, ஆதாரம் நிலைநாட்டப்பட்டிருக்கிறது. இந்த ஆதாரங்களுக்குப் பிறகும் (உண்மையை) ஏற்கவில்லையெனில் (அடுத்து வரும்) அல்-அ.்.ராப் அத்தியாயத்தில், தெளிவான முறையில்-சரித்திரச் சான்று மற்றும் வரலாறுகள் மூலம் கீழ்ப்படியாமையின் முடிவு விளக்கப்பட்டிருக்கிறது.